திருவள்ளுவர் ஆண்டு 2037

செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 101 பகுதி : 5 மே–07

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

முகவை மன்னர் திரு. நா.குமரன் சேதுபதி	தலைவர்
திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார்	துணைத்தலைவர்
திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,	செயலாளர்
திரு. இரா குருசாமி பி.ஏ.,	உறுப்பினர்
திரு. டாக்டர். ந. சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S.(Uro) F.I.C.S.,	உறுப்பினர்
திரு. ச. பரங்குன்றம் பி.ஏ.,	உறுப்பினர்
திரு. க. முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
திரு. இரா. கண்ணன்	உறுப்பினர்
திரு. மா.ச.கார்த்திகேய பாலாஜி பி.இ.,	உறுப்பினர்
திரு. எஸ்.எம். நாகராசன் பி.ஏ.,	உறுப்பினர்
திரு. பி. வீரணன்	உறுப்பினர்
திரு. மா. ச. மாரியப்பமுரளி பி.ஏ., பி.எல்.,	உறுப்பினர்

கல்லூரிக் குழு

திரு. டாக்டர்.ந. சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S.(Uro) F.I.C.S.,	தலைவர்
திரு. இரா.குருசாமி பி.ஏ.,	செயலாளர்
திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,	உறுப்பினர்
திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார்	உறுப்பினர்
திரு. ச. பரங்குன்றம் பி.ஏ.,	உறுப்பினர்
திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி பி.இ.,	உறுப்பினர்
திரு. க. முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
திருமதி. வாசுகி ராஜா எம்.எஸ்.சி., எம்.ஃபில்.,	உறுப்பினர்
இராஜா. திரு. டி.என்.எஸ். முருகதாஸ் தீர்த்தபதி	உறுப்பினர்
திரு. இரா. கண்ணன்	உறுப்பினர்
திரு. மா.ச. மாரியப்பமுரளி பி.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
டாக்டர். திரு. க. சின்னப்பா பிஎச்.டி., முதல்வர்	உறுப்பினர்
டாக்டர். திருமதி. வீ. காந்திமதி பிஎச்.டி., இணைப்பேராசிரியை	உறுப்பினர்
டாக்டர். திருமதி. செ. தனலெட்சுமி பிஎச்.டி., இணைப்பேராசிரியை, பல்கலைக்கழக உறுப்பினர்	உறுப்பினர்
டாக்டர். திரு. இரா. மோகன் எம்.ஏ., பிஎச்.டி.,	உறுப்பினர்

செந்தமிழ்

(தோற்றம் 1902)

தொகுதி : 101
பகுதி : 5
மே 2007

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2037

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 60	ரூ. 600
புரவலர் கட்டணம்	ரூ. 1000	ரூ. 2000
தனி இதழ்க் கட்டணம்	ரூ. 6	

ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர் – மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–625 001.

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ., எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–625 001.

பொருளடக்கம்

இதழ்மணம் 168

பாண்டித்துரைத்தேவர் நான்மணிமாலை 169
(தொடர்ச்சி)
ஆசிரியர் : சிவசம்புப் புலவர்
விளக்கவுரை : பேராசிரியர். இரா. சதாசிவம்

மு. இராகவையங்காரின் செந்தமிழ்ப் பணி 191
முதுமுனைவர் ம.சா. அறிவுடைநம்பி

மூன்று சொற்களும் மும்மண்டலமும் 200
ஆய்வு மாணவர் ஜெ. அரங்கராஜ்
தமிழ்ப் பல்கலைக்கழகம்,

இதழ்மணம்

மதுரைத் தமிழ்ச் சங்கம் மற்றும் செந்தமிழ் இதழ்— இவற்றின் நூற்றாண்டு விழா ஓரிரு திங்களில் சிறப்புற நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அவ்விழாவின்போது செந்தமிழ் இதழில் அறிஞர் பெருமக்கள் இரா. இராகவையங்கார், மு. இராகவையங்கார், ச. வையாபுரிப்பிள்ளை, ஔவை சு. துரைசாமிப்பிள்ளை பாண்டித்துரைத் தேவர் போன்ற அறிஞர் பெருமக்கள் அக்காலத்தில் எழுதிய கட்டுரைகளை நூல் வடிவில் வெளியிடுவதற்கான பணிகளை ஆய்வு மாணவர்களும் செந்தமிழ்க் கல்லூரி ஆசிரியர்களும் மேற்கொண்டுள்ளனர்.

அறிஞர்கள், அ.அ. மணவாளன், தமிழண்ணல், புலவரேறு இளங்குமரன், கு.வெ. பாலசுப்பிரமணியன், நா. பாலுசாமி, தமிழ்ப் பல்கலைக் கழக முன்னைத் துணைவேந்தர் கதிர் மகாதேவன், இராம. சுந்தரம் போன்றோர் இப்பணி சிறந்திட உரிய அறிவுரை வழங்கி வருகின்றனர்.

தமிழறிஞர்கள் இது குறித்து மேலும் செய்திகள் வழங்கி நூல் சிறப்புற வெளிவரச் செந்தமிழ் ஆசிரியரைத் தொடர்பு கொண்டு செய்திகளை அனுப்பி உதவ வேண்டுகிறோம்.

யாழ் நல்லூர், உடுப்பிட்டி சிவசம்புப்புலவர் பாடிய பாண்டித்துரைத் தேவர் நான்மணிமாலையின் உரைவிளக்கம் செந்தமிழ்ப் பதிப்பாசிரியரால் எழுதப்பெற்று வெளிவருகிறது. இது பற்றிய திருத்தங்கள் வேண்டுவோர் எழுதி அனுப்பினால் பெரும் உதவியாக இருக்கும்.

பதிப்பாசிரியர்.

பாண்டித்துரைத்தேவர் நான்மணிமாலை

(தொடர்ச்சி)

ஆசிரியர் : சிவசம்புப் புலவர்
விளக்கவுரை : பேராசிரியர். இரா. சதாசிவம்

பொற்சபை

வெண்பா

என்னா லிசைக்கவற்றோ வென்போல்வா ரெல்லாருஞ்
சொன்னாலு முற்றுமோ தூயகர — முந்நாலா
யேய்ந்தவனைத் தாழ்ந்திடும்பாண் டித்துரைதான் வீற்றிருக்கும்
வாய்ந்த கனகமலி மன்று. — (31)

முருகனை முற்றும் உணர்ந்து, பாடுதல் அரிது. அதனால் நக்கீரர் நின் அளந்து அறிதல் மன்னுயிர்க்கு அரிது என்றார். நம் பாண்டித்துரையார் பன்னிரெண்டு கைகளை உடைய முருக வேளைப் போற்றி வணங்கும் இயல்பினர். அதனால் முருகக் கடவுளின் அருள் நலம் வாய்க்கப் பெற்றவர். முருகனை முற்றும் உணர்த்த முடியாதது போலவே பாண்டித்துரையின் புகழையும் அவர் தலைமை ஏற்கும் மன்றத்தையும் புலவர்கள் அனைவரும் சேர்ந்து பாடினாலும் முற்றுப் பெறப் பாட இயலாது. பாண்டித்துரையார் வீற்றிருக்கும் அவை அரிய பெருமை உடையது. அவர் கல்வி நலமும் கேள்வி நலமும் அருள் நலமும் புலத்துறை முற்றிய பாநலமும் உடையவர். அதனால் பாண்டித்துரையையும் அவருக்கு வாய்த்த புலவர் குழுவையும் முற்றுப்பெற எடுத்துரைக்க இயலாது. அவருடைய அவையில் வீற்றிருந்தவர்களே மு. இராகவையங்கார், இரா. இராகவையங்கார் முதலிய அறிஞர்கள். இவர்களே தமிழ் இலக்கிய இலக்கண ஆய்வுக்கு அண்ணாமலை, சென்னை முதலிய பல்கலைக்கழகங்களில் வித்திட்டவர்கள். உ.வே. சாமிநாதையர் இவருடைய வித்துவ சபையை அலங்கரித்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் ஆவார். ஆய்வு உலகம் இன்றைக்கும் இப்பெருமக்களுடைய ஆராய்ச்சி உரைகளுக்கு நன்றி பாராட்டுகிறது. அதனால் இப்புலவர்

"என்னாலும் என்போல்வார் எல்லாரும் சொன்னாலும் முற்றுமோ ?"

என இவருடைய புலவர் அவையைப் போற்றுவது சாலப் பொருத்தமாகும்.

தன்உயிர் போல் மன்னுயிர் ஓம்பும் பொன்னுச்சாமித் தேவர்

கலித்துறை

மன்னிய செல்வப்பெருவாழ்வி
னீரென்றும் வாழ்ந்திருக்க
வின்னியல் பாடுமென் போல்வார்
துயரி லிளைக்கவற்றோ
தன்னிக ராமுற் றுயிரோம்
பியபொன்னுச் சாமிதந்த
பொன்னிய லானமெய்ப் பாண்டித்
துரைச்செல்வப் புண்ணியனே. – (32)

தன்னுயிர் போல் மன்னுயிர் ஓம்பிப் போற்றும் இயல்பினர் சான்றோர். பொன்னுசாமித்தேவர் அனைத்து உயிர்களையும் தன்னுயிர் போல் பாதுகாக்கும் இயல்பினர். அப்பொன்னுசாமித் தேவர் தந்த பொற்புடை இயல்பினர் பாண்டித்துரையார். சான்றோர் தொடர்பினாலும் குடிப்பிறப்பாலும் தவயோகப் பயிற்சியாலும் மெய்ப்பொருள் தேர்ந்தவர் பாண்டித்துரையார். அதனால் ஆசிரியர் இவரை,

"மெய்ப்பாண்டித்துரைச் செல்வப் புண்ணியனே"

எனப் போற்றுகிறார். இவ் உலகியல் வாழ்க்கைக்குச் செல்வம் தேவை. செல்வத்தால் பெறும் பேறு, அருள் விளங்கப் பிறர்க்குப் பயன்படும் வண்ணம் நற்செயல்களைச் செய்து புண்ணியம் ஈட்டுவதே ஆகும். அப்புண்ணியத்தால் தன்னுடைய மூதாதையர் நற்பேறு பெறுவர். இதனைத் திருவள்ளுவர்,

"எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்" – (குறள் 62)

எனப் போற்றுவார். பாண்டித்துரையார், பொன்னுசாமித் தேவரும் அவருடைய மூதாதையர்களும் செய்த தவத்தாலும் புண்ணியத்தாலும் பிறந்தவர். இவரே பழிபிறங்காப் பண்புடை மகன். வழிவழி வந்த குலத்தோன்றல் இவர். கரும்பு அயிரக் கூலி கொடுக்கும் இயல்புடைப் பெருமகனாதலால் தமிழின்பம் விரும்புவார்க்கெல்லாம் பொருள் வழங்கி இன்புறுவார். அப் பெருமகனார் புகழொடு விளங்கும் இந்நாளில் புலவர்கள் துயருவார்களா? மன்னிய செல்வப் பெருவாழ்வில் திளைக்க நின் அருள் ஒன்றே போதும்.

தமிழ்ச் சங்கம்

விருத்தம்

புண்ணிய நிலைக்கோல் பொற்புற வோச்சிப்
புவிப்பொறை பொறுத்தபைம் பொலம்பூட்
டிண்ணிய வரைத்தோட் செயரகு நாத
சேதுகா வலன்முதற் செல்வர்
நண்ணிய புகழ்மை நாடொறு மோங்க
நம்பிபாண் டித்துரை நாட்டிக்
கண்ணிய கழக நிறுவிக்கா தலர்க்குக்
கலைகள் சந்தத்ங்கற் பிப்பானே. **(33)**

சேரர் சோழ பாண்டியர்களுடைய புகழையும் பழைமையையும் கூறும் போது கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்தோன்றி மூத்தகுடி என்பர். அக்குடிப் பிறந்தோர் அறம் வழுவாது நின்று முறை செய்தனர். தமிழ் மக்கள் வாழ்வோடு ஒன்றி முத்தமிழை வளர்த்தனர். இச்சேதுபதி குடியும் இரகுகுலவேந்தராகிய இராமனோடும் இராமேச்சுரத்தோடும் தொடர்புடையது. அதனால் இக்குடிப்பிறந்து சூரியகுலத்தவர் பெயர் விளங்க இரகுநாத சேதுபதி என்னும் கிழவன் சேதுபதி புகழ்பெற்று விளங்கினார். அத்தகைய குலச் செல்வன் சேதுஇரகுநாத சேதுபதி சேதுநாட்டு அரசாட்சியைப் புண்ணியப் புகழ் விளங்கச் செங்கோல் செலுத்தினார். சேதுநாட்டுப் பூமி பரிபாலனத்தைச் செவ்வனே நடத்திப் பகைவர்களை ஒடுக்கிக் கொலை, களவு முதலான குற்றங்களைச் செய்பவர்களை ஒறுத்து நீதி நிர்வாகம் நடத்தினார். அவருடைய புகழ் என்றும் விளங்கும்படியாக நற்பெயர் பெற்ற பாண்டித்துரை நம்பி புகழ்மிக்க கல்விக் கழகமாகிய தமிழ்ச் சங்கத்தை நிறுவி, கல்வித் தாகம் உடையவர்களுக்குக் கல்வியும் கலைகளும் வழிவழி நின்று நிலவவும் கற்பிக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறார். அதனால் பாண்டித்துரையாகிய உன் புகழ் மட்டுமல்ல, செய இரகுநாத சேதுபதி முதலான புகழ்மிக்க அரசர்களின் பெயர்களும் உன்னால் நிலைபேறுடையதாயிற்று. நின்புகழ், நின் முயற்சி என்றும் வளர்வதாகுக! நாடொறும் ஓங்குவதாகுக! எனப் புலவர் வாழ்த்துகிறார்.

திருகலாகிய சிந்தை திருத்தலாம்

அகவல்

கற்றவர் தூக்கினா னற்றிறந் தூக்கினான்
முற்றலர் தருமன் புற்றமெய்த் தருமன்
மன்றனை மனத்தா னொன்றவெண் மனத்தான்

குன்றுறழ் நிதானன் பொன்றலி னிதானன்
றேவையம் புரியான் பாவம் புரியான்
காவன கையா னாவுரை கையா
னருண்முக மதியான் றெருண்மிகு மதியான்
பொருளியல் கலையா னிரணியக் கலையான்
றிருகுள மிசையான் பெரிதுறு மிசையா
னொருவரும் போகி தரையமர் போகி
சைவமா மித்திரன் செவ்வியோர் மித்திரன்
மௌவல்சூழ்மொய்ம்பன் றெவ்வர்தாழ்மொய்ம்பன்
றிருநுதற் காப்பான் மருவினர்க் காப்பான்
சுரர்மறை தொழும்பன் னிருபுயன் றொழும்பன்
றுங்கமெய்ப் பாண்டித் துரைதன்
சங்கமே புங்கவர் தங்கிய சங்கமே. – (34)

பாண்டித்துரைத்தேவர் கல்வியாளர்களின் துயரத்தைப் போக்கி அவர்களை மேன்மைப்படுத்தும் இயல்பினர். நன்மக்களுக்கு உதவுதல் என்றும் நன்னெறி காட்டுதலாக உலகத்திற்கு அமையும்; உலகவர் அவர் நெறியே ஒழுகுவர். சான்றோர் சென்ற நெறியென எண்ணி உலகவர் அந்நெறியில் செல்வர். பாண்டித்துரைத்தேவர் கற்றவர் நலம் நாடினார். அவர்தம் முயற்சியைப் போற்றினார். சென்னையில் சிந்தாதிரிப்பேட்டையில் வாழ்ந்த சிங்காரவேலு முதலியார் சிறந்த கல்வியாளர் ஆவார். இன்றும் தமிழ் உலகம் போற்றும் அபிதான சிந்தாமணியின்ஆசிரியர் அவர். அபிதான சிந்தாமணியை எழுதிய அவர் அதனை அச்சிட்டு வெளியிடுவதற்குப் பலகால் பலரிடம் வேண்டிய முயற்சி செய்தார். ஆனால் அந்நூலின் அருமை அறியாத பலரும் அவரை அலைக்கழித்து உதாசினப்படுத்தினர். வள்ளல் பாண்டித்துரைத் தேவர் அவர்கள் சிந்தாதிரிப்பேட்டைக்கு அவருடைய இல்லத்தை நாடிச் சென்று பிழையின்றி அச்சிடுவதற்கு வேண்டிய அனைத்துத் திட்ப நுட்பங்களையும் மேற்கொண்டு அந்நூல் வெளிவர உதவினார். இது போன்ற பல கற்றவர் முயற்சிகளுக்கு பாண்டித்துரையார் தக்க சமயத்தில் உதவி அவர்களுடைய செயல்திறம் பழுதுபடாமல் உயர்த்தினார். இத்தகு கல்வி முயற்சிகளை அறிந்த புலவர்

"கற்றவர் தூக்கினா னற்றிறந் தூக்கினான்"

எனப் போற்றுவது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை. அறநெறி நிற்பதற்கு மெய்யுணர்வும் அன்பும் வேண்டற்பாலது. அன்பே

தருமங்களின் மூலம். அவ்வன்பைப் பயில்வதற்கு பலகால் தோய்ந்த மெய்ப் பொருள் அறிவுவேண்டும். அவரே சான்றோர் ஆவர். நம் பாண்டித்துரையாரை, ஆசிரியர், தரும நெறி நிற்றலினால் மெய்ப்பொருள் உணர்ந்த தருமன் என்றும், அவ் மெய்யுணர்வு மலர்தற்கு நெஞ்சக் கமலத்தில் அன்பு வேண்டுமாகையினாலே

"முற்று அலர் தரும் அன்புற்ற மெய்த்தருமன்"

எனப் போற்றுவது புலவரின் அன்பின் ஆழமும் நூல்பயிற்சியும் வெளிப்படுகிறது.

சான்றோர் கூட்டமும் தொடர்பும் இருத்தலினால் மெய்ப்பொருள் தெளிவும் அன்பின் சிறப்பும் உணர்ந்த பாண்டித்துரையார் அதன் பயனாகிய தியான சமாதி பக்குவ நிலையை எய்தினார். திருச்சபையில் நடம்செய்யும் ஆடல் வல்லானை மனத்தால் ஒன்றித் தியானிக்கவும் நிலைநிறுத்தி சமாதிகூடவும் வல்லவர் என்பதனை ஆசிரியர்,

"மன்றனை மனத்தான் ஒன்ற வெண் மனத்தான்"

எனப் பாண்டித்துரையாரின்உயர்நிலையை எடுத்துரைக்கிறார். பாண்டித்துரையார் இம்மண்ணில் வாழ்ந்தாலும் அவருடைய நெஞ்சக் கமலம் விண்ணில் மெய்ப்பொருளோடு ஒன்றித் தவழ்ந்தது என எண்ண இவ்வடிகள் இடம் தருகின்றன. இத்தகு அருளாளர் ஆகையினாலே காமம் வெகுளி மயக்கம் ஆகிய குற்றங்கள் இவரிடத்து இல்லை. இவர் எப்பொழுதும் மனஅமைதி உடையவராக விளங்கினார். மனஅமைதியே சாந்த நிலை. அத்தகைய நிலையில் இப்பெரியார் வாழ்ந்தார். திருவள்ளுவர் நீத்தார் பெருமை என்னும் அதிகாரத்தில் இவர்களைப் பெரியார் என்றும் குணம் என்னும் குன்றேறி நின்றார் என்றும் குறிப்பிடுவார். இங்கே ஆசிரியர் பாண்டித்துரைத்தேவரை,

"குன்று உறழ் நிதானன் பொன்றலில் நிதானன்"

என்றும் போற்றுகின்றார். தேவையம்பதியில் சான்றோர் இனத்தோடு இருத்தலின் பாவகாரியம் முதலியவற்றை மனத்தளவிலும் நினைக்கமாட்டார். இவர் பிறர்க்கு ஈதலினாலே கவிழ்ந்த கையை உடையவராகவும் ஈதலும் அன்பும் உடையவராகையால் எப்போதும் இன்சொலும் பயின்று வந்தார். அவருடைய வாய் செவி கைக்கும் இன்னாச் சொற்களை அறியாது. இத்தகு அருளாளர் ஆகையினாலே அகத்தின் அழகு அவருடைய முகத்தில் முழுநிலவு போலப் பிரகாசித்தது. அதனால் அவருடைய முகப்பொலிவை அருள்முக மதியான் என முழுமதியொடு உருவகம் செய்திருப்பது சிந்திக்கற்பாலது. இவர் தெளிந்த

அறிவினர். அதனால் உலகியல், பொருளாதாரம் இன்னபிற கலைகளிலும் சிறந்து விளங்கினார். உலகியல் வாழ்க்கையில் ஈடுபடுபவர்கள் வஞ்சனையும் சூதும் உடைய திருகல் புத்திக்காரர்களாக அலைகிறார்கள். இப்பெரியார் இறைவன் அருள் பெற்றவர்.

"பெருகலாம் தவம் பேதமை தீரலாம்
திருகலாகிய சிந்தை திருத்தலாம்"

என்னும் அப்பர் சுவாமிகளுடைய திருவாக்கின்படி, இப்பெரியாரும் திருகல் ஆகிய சிந்தனை இல்லாதவர். இதனை ஆசிரியர் '*திருகு, உளம் இசையான் அதனால் பெரிது வரும் புகழான்*' எனப் போற்றுகின்றார்.

சிவனைச் சைவன் என அப்பர் போற்றுவார். இப்பெரியாரைப் பெரும் புலவராகிய சிவசம்பு சைவமா மித்திரன் எனப் போற்றுகின்றார். இப்பெரியார் செம்பொருள் உணர்ந்தவர் நினைக்கமனத்து அமுதாம் நண்பன். அதனால் செவ்வியோர் மித்திரன் என இவருடைய செயற்கரிய பெருவாழ்வைக் கற்போர் உளம் கொள்ள எடுத்துரைக்கின்றார். உலகியல் குற்றங்களை வென்று வாகை சூடியவராகையினால்,

"மௌவல் சூழ் மொய்ம்பன் தெவ்வர் தாழ் மொய்ம்பன்"

எனக் குறிப்பிடுவர். துப்புடையார் அடிசார்தல் உற்றுழி உதவுவார் என்னும் உள்ளத்து அவாவினாலே ஆகும். நம் பாண்டித்துரையாரும் செல்வத்தைப் பாதுகாத்தல் தன்னையடைந்தார்க்கு உதவுதல் பொருட்டே ஆகும். இதனை ஆசிரியர்,

"*திருநுதற் காப்பான் மருவினர்க் காப்பான்*"

எனக் குறிப்பிடுகிறார். பொருளின் மீது கடும்பற்றின்றி அருளாளராக விளங்குவது பன்னிருகைகளை உடைய முருகக்கடவுளைத் தொழுது பெற்ற பேறாகும். இத்தகைய அருளாளராக இவர் வாழ்ந்ததனாலே சான்றோர்களாகிய மெய்ப்பொருள் உணர்ந்த சத்சங்கத்தினர் இவரோடு சேர்ந்து சங்கம் வளர்க்கின்றனர்.

திருவிளையாடல்

வெண்பா

சங்கத்தி லன்று தருமிக்குக் கண்கிழித்த
சங்கத்தான் பாவுரைத்த தன்மையென்றுஞ்—சங்கத்துக்
கீயுநெறி காட்டியவா றென்பார்பாண் டித்துரையே
நேயமுறக் கொள்ளுமிதுன் நெஞ்சு. – (35)

தமிழ் இலக்கியத்திற்குப் பெருமை சேர்த்தவர்களில்

திருவிளையாடல் புராணம் பாடிய பரஞ்சோதி முனிவர் குறிப்பிடத்தக்கவர். அவருடைய திருவிளையாடற் புராணம் மற்றைய புராண்ஙகளைக் காட்டிலும் தலைசிறந்ததாகும். இவருடைய புராணத்தைப் பார்த்துப் பிறதலங்களுக்கும் பல புலவர்கள் தலபுராணம் பாடினர். இவர் பாடிய. தலபுராணம் மதுரை ஆலவாயில் எழுந்தருளியுள்ள சிவனது சிறப்புக் குறித்ததாகும். மதுரை மாநகரின் ஏற்றம் சைவமும் தமிழும் என்பர். அதனை உணர்ந்த பரஞ்சோதியார் சிவனது சிறப்பைப் போற்றியதோடு செந்தமிழின் ஏற்றத்தையும் போற்றிப் பரவினார். திருவிளையாட்டல் புராணத்தில் பல படலங்கள் தமிழையும் தமிழ்ச் சங்கப் புலவர்களுடைய ஏற்றத்தையும் குறித்தே பேசுகின்றன. வெள்ளியம்பலத்து ஆடல் வல்லானாகிய இறைவன் தன் அடியவனாகிய தருமியின் பொருட்டுச் செந்தமிழ்ப் பா புனைகின்றான். அப்பாடல் சங்கஇலக்கியத்துள் குறுந்தொகையில் இறையனார் பாடியதாக இடம்பெறுகிறது. அவ்வரிய பாடலைத் தமிழ்ப் புலவர்கள் பலகால் பயின்றும் திறனாய்வு செய்தும் இன்புற்றனர். அதனை உணர்ந்த பரஞ்சோதி முனிவர் அச்செந்தமிழ்ப் பாட்டின் ஏற்றம் கருதி இறையனார் தருமிக்காகப் பாடியது என்றும், அப்பாடலின் சொற் செல்வமும் பொருளும் சங்கத்தில் புலவர்களின் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதையும் நாடகப்பாங்கில் பாடிச் சிறப்பித்துள்ளார். பரஞ்சோதியார் பல ஆயிரம் ஆண்டுகள் பழைமைவாய்ந்த சங்கப் பனுவலின் ஏற்றம் உணர்ந்தவர். அதனால் இச்சங்கப் பாடல்கள் நெஞ்சம் கவர்ந்த இறைவனைப் போன்று சொல்லும் பொருளும் இன்பம் தருதலால் இப்பாடல்கள் என்றும் பாராட்டப்படவேண்டும் என்னும் இலக்கிய ஈடுபாட்டோடு நக்கீரரையும் சிவனையும் சங்கத்தாரையும் இந்த நாடகத்தில் பாத்திரங்கள் ஆக்கியுள்ளார். நம் சிவசம்புப்புலவர் இச்சிறப்புக்களை எல்லாம் நன்குணர்ந்த பெரியார். அதனால் இந்நிகழ்ச்சியின் அற்புதத்தைப் பாண்டித்துரையார்க்கு எடுத்துரைக்கிறார். சங்கத்தில் அன்று இறைவன் நக்கீரரின் ஆணவமலம் அழிதற் பொருட்டு அனல் கண்ணால் நோக்கினான். கண்கிழித்து அனல் பரவ நக்கீரன் தண்ணீர் நிறைந்த தடாகத்தில் ஆழ்புனலில் வெப்பம் தாங்காது விழுந்தான். இறைவன் நக்கீரரது அருமையும் பெருமையும் அறிந்தவர். அதனால் அருட்கண் கொண்டு மீண்டும் அவரிடத்து நோக்கினான். நோக்கவே வினைவயப்பட்ட பொறிபுலன், கரணம் எல்லாம் சிவனது அருளால் நீங்கி அன்புருவம் கொண்டது. தருமி பொருள் வேண்டினான். அவனுக்கு இறைவன் இவ்வுலக வாழ்வுக்குப் பயன்பட்டு அழியக் கூடிய பொருளைக் கொடுத்தான். நக்கீரர் எப்போதும் என்றும் இன்பம் தரக்கூடிய

மெய்ப்பொருளையே போற்றி அதையே இறைவனிடத்தும் எதிர்பார்த்தார். அதனால் அவருக்கு இறைவன், "வினைக்கணே எடுத்த யாக்கை, வேறுஇல் அன்பு உருவம் அளித்தார். நக்கீரர் சிவனை அன்னியமாகக் கருதாத அன்பு உருவம் பெற்றார். பேறுகளில் பெறத்தக்கது இதுவே ஆகும். "பாண்டித்துரையே! இதுவே நீயும் சங்கத்தில் கற்கும் நெறியாகும். உன் நெஞ்சும் புலவர்க்கு ஈயும் அருள் உள்ளமும் மெய்ப்பொருளை நாடும் பேறும் பெற்று, இன்பம் நிறைந்த அன்பை நெஞ்சம் காதலிப்பதாக எனப் புலவர் மெய்ப் பொருள் உணர்த்தினார்.

நான்மணிமாலை

கலித்துறை

நெஞ்சேயங் குற்றிங்கு வாளா வரில்வசை நேருமென்னே
லஞ்சே னிகர்விழி வள்ளி மணாள னருளிலனோ
மஞ்சே யனசெங்கை பாண்டித் துரைக்கு வழிப்பட்டகா
ணஞ்சேயுட் டெவ்வருஞ்சேர்ந்தாரைக்காண்பர்கணன்கெய்தவே(36)

புலவர் தம் நெஞ்சை நோக்கி, மழையன்ன ஈகையுடைய பாண்டித்துரை ஈதலில் காலம் தாழ்த்தினான். சில சமயங்களில் புலவர்கள் மேல் உள்ள ஈடுபாட்டின் காரணமாக அவர்கள் தன்னோடு இருக்க வேண்டும் என்னும் உள்ளக் கிடக்கையால் காலம்தாழ்த்துதல் உண்டு. உ.வே. சாமிநாதய்யர் பாண்டித்துரைத்தேவருடைய தாயார் இறந்தசமயம் இராமநாதபுரம் போய்ச் சேரமுடியவில்லை. கோடை விடுமுறையில் தேவர் அவர்களைக் கண்டு இதனைக் கேட்டு வரவேண்டும் என்று இராமநாதபுரம் சென்றார். இராமநாதபுரத்தில் இப்பெரியாரைப் பாண்டித்துரையார் ஒரு மாதம் தங்க வைத்துத் தமிழ் இன்பத்தில் திளைத்தார். பின்பு, பாண்டித்துரையார் அதனைக் குறிப்பிடும் பொழுது, "என்னுடைய தாயார் உயிருடன் இருக்கும் காலத்தும் எனக்குப் பெரும் உபகாரியாக விளங்கினார். அவர் இறந்த பின்பும் அவர் பொருட்டாக உ.வே.சா போன்ற பெரியவர்கள் என்னோடு இருந்து தமிழ் இன்பம் தரும்படி செய்கிறார்" என உ.வே.சா தன்னைப் பார்க்க வந்ததைக் குறிப்பிடுவார். இவ்வாறு பாண்டித்துரையார் புலவர்களுடன் நெஞ்சம் கலந்து பழகும் இயல்பினராய் இருந்தார். அதனால் பாண்டித்துரையைப் பிரிந்த பின்பும் கூட அவருடைய அன்பையும் விருந்து போற்றிய பெருமிதத்தையும் நெஞ்சம் மறப்பதில்லை. அவரைப் பிரிந்து வீடு சென்ற பின்பும் கூட நெஞ்சு பாண்டித்துரையிடமே கிடக்கிறது. அது தன்வசப்படுவதில்லை.

இதனை ஆசிரியர், "நெஞ்சே அங்குற்று இங்கு வாழாவரில் வசைநேரும்" என அறிவுறுத்துகிறார். அருள் செய்வதற்குப் பாண்டித்துரை ஒருவன்தான் உளனோ அழகிய கயலன்ன விழிகளை உடைய வள்ளி மணாளனும் அருளுடையவனே ஆகவே நீ வருந்தாதே எனக் குறிப்பிடுகிறார். பொய்யில் புலவராகிய கபிலர் 'பாரி மட்டும் இல்லை மாரியும் உண்டு, ஈண்டு உலகு புரப்பதுவே' எனப் பாரியைப் புகழ்வார்.உலகைக் காக்கப் பாரிவள்ளல் மட்டுமல்ல, மழையும் உண்டு என்பது பாரியும் மாரியும் ஒத்த அருளினர் என்பதாகும். சிவசம்புப் புலவர் செந்நாப்புலவர் வழிவந்த சான்றோர். அதனால் பாண்டித்துரை மட்டுமல்ல வள்ளி மணாளனும் உயிர்களிடத்து அருளுடையன்என்று போற்றுகின்றார். சம்பு என்றால் இன்பம் செய்பவன். நம் சிவசம்புப் புலவரும் கவிதைகளைப் படைத்துக் கற்பவர்களுக்கு என்றும் இன்பம் அளிக்கின்றார்.

யாணர்ச் செல்வம்

விருத்தம்

எய்த்தலை வெய்தும் பாவலர்க் கீயா
னென்றிடிற் கலையிலே யாசை
வைத்தலை யொழிவான் வறியனோ வென்னின்
வழிவழி வருநிதி மலையான்
செய்த்தலை வாளை சேலுக டேவைச்
சீலப்பாண் டித்துரைச் சீமான்
முத்தலை வேலோ னருச்சனை முடித்துண்
முற்றுற நெகிழ்முறை யானே. – *(37)*

புலவர்கள் நெஞ்சம் எப்பொழுதும் கல்விச் செல்வத்தையே விரும்பும் இயல்புடையது. கற்றல், கல்வி வல்லாரிடம் கேட்டல், தாம் கற்றவற்றை மாணவர்களுக்குக் கற்பித்தல், விரும்பிக் கேட்கும் மக்கள் அவையில் நற்பொருட் செய்திகளை உரையாற்றி அவர்களை மகிழ்வித்தல், நெஞ்சம் நிறைந்த கருத்துக்களைக் கவிதைகளாக வடித்துத் தருதல், இவையன்ன நற்செயல்களையே புலவர்கள் விரும்புவர். அற்பப் பொருள்களை வேண்டி அவர்களுடைய மனம் சிந்திக்காது. பொருளற்றார் ஒருகால் பூப்பர் என்றும், அருளே என்றும் சிந்தித்து ஈட்டுதற்குரியது என்றும், திருவள்ளுவர் கூறி இருப்பது இத்தகைய புலவர் வாழ்க்கையே ஆகும். ஒரு சமயம் மரம் முழுவதும் பூத்து நிற்கும். பூப்பது போல உதிர்ந்து போகும். அருளே என்றும் நிலையானது,

நிலையான பொருளையே சான்றோர்களாகிய புலவர்கள் நாடுவர். அத்தகைய புலவர்கள் செல்வச் செழிப்பு இன்மையினாலே முகவாட்டமுடையவர்களாகச் சிலசமயம் இருப்பார்கள். தங்களுடைய வறுமை நீங்குதற் பொருட்டு அருள் உள்ளம் படைத்த செல்வச் சீமான்களைத் தேடிச் செல்வர். சீலப் பாண்டித்துரைச் சீமான் புலவர்களைக் கடனறிந்து போற்றும் இயல்பினர். புலவர்கள் வறுமையாளர்களாக வாழக்கூடாது என உறுதியாக இருந்தார். புலவர்கள் வறுமையுற்றால் ஒரு நாட்டில் வழிவழியாகப் பாராட்டிப் போற்றி வந்த கலைச் செல்வங்களெல்லாம் வறுமையுறும். கலைப்படைப்புக்கள் புலவர்களுடைய அரிய முயற்சி. அம் முயற்சியில் ஈடுபாடு கொண்டால் அது மக்களைச் சென்றடையும். கலைச் சிறப்பால் மக்கள் பண்பாடு, நாகரீகம் இவற்றில் மேலோங்கி நாடு நல்வழிப்படும். அரசரும் அரசரை ஒத்த சீமான்களும் வழிவழியாக வந்த பல்விரல் தாயம் தங்களுடையது என்று நினைக்காமல் இத்தகைய கலை வாழ்வுக்குரியது என்று கடனறிந்து ஒழுக வேண்டும். அத்தகைய கடப்பாட்டாளர் பாண்டித்துரையார்.அப்பெருமகனார் காலை வேளைகளில் இசைத் தமிழ்ப் பாக்களை இசைக் கலைஞர்கள் இசைக்க, திரிசூலம் ஏந்திய இறைவற்கு அர்ச்சனை செய்யும் இயல்பினர். புறத்தே தமிழோடு இசைப்பாடல் மறந்தறியா இயல்பினர். சலம்பூவோடு தூபம் மறந்தறியார். அகத்தே உள்ளம் திருவருளால் நனைந்து நெகிழ்ந்து உருகும் இயல்பினர். இத்தகைய அருளாளர் நெல்விளையும் வயல்களில் உழவர்களுக்கு வாளை மீன்களும் பெருகிக் கிடைப்பது போல, இத்திரு நாட்டில் பொருளோடு அருளும் வழங்குவார். கரும்பு அயரக் கூலிகொடுக்கும் குலத்தோன்றல் நம் பாண்டித்துரை 'உன் கலையை ரசித்து இன்புறுவார். அவர் இன்புறுவதே உன் வறுமையைப் போக்கிப் பெருமை சேர்க்கும். அதோடு நிற்காது. உனக்கு அவர் பெருநிதிக் குவையும் வழங்கிச் சிறப்பிப்பார்' எனப் போற்றுகிறார்.

கருணை வெள்ளம்

அகவல்

முறைமையிற் றேவையாண் முன்னவர் சூடிய
வெறிகதிர் மணிமுடிக் கிசைந்திடுஞ் சிரத்தான்
புண்டர மாகிய புனிதவெண் ணீறு
மெண்டகு திலகமு மிசைந்திடு நெற்றியான்
பொங்குதண் ணளிகுலாய்ப் பூரண மதியையுஞ்
செங்கம லத்தையுஞ் சிரிக்கு முகத்தான்

எள்ளுறு மிடித்தழ லெறும்கெடக் கருணையாம்
வெள்ளஞ் சுரந்திடும் விரைமலர் நோக்கான்
விழிப்புனல் கால்பொர மெய்த்திருத் தொண்டர்கள்
பழிப்பரும் பாவகை படிக்கும் வாயான்
துன்பினுற் றவர்செவித் துளைவழி யோடியுள்
ளென்பையு முருக்கிடு மினியமென் மொழியான்
கனகமெய்ச் சரத்தொடு கவினுறு கண்டிகை
யனக வடமு மமர்ந்தகந் தரத்தான்
மாசுண மலைதனை வளைத்தென நவமணித்
தேசுறு மங்கதந் திகழிணைப் புயத்தா
னணிகிளர் பசும்பொனா லமைந்துமே தக்க
மணிகிளர் கடகம் வயங்கிய கையா
னிறைவிலைச் செம்பொனா னேர்ந்துமா மணிநிரை
குறைவறக் குலவுமங் குலியமார் விரலான்
மாவணி மதாணியும் வயங்குப வீதமுந்
தாவிலுத் தரீயமுந் தயங்கிய வுரத்தான்
வன்னந் துறுங்கர மாயனும் வேட்கும்
பொன்னந் துகிற்கெழில் புணர்த்திடு மிடையான்
சந்தத மேத்திய சைவா கமவழிச்
சிந்தைநெக் கியற்றிடுஞ் சிவார்ச்சனைப் பத்தியான்
பரவிய பெரும்புகழ்ப் பாண்டித்
துரைதவ மேதவத் துறையினில் வாய்ந்ததே. – (38)

மக்கட் பிறப்பு இம்மை மறுமைப் பேறுகளை விரும்புவதாகும். இம்மையில் அறவழியில் நிற்றலும் பொருளைப் படைத்தலும் படைத்த பொருளைக் கொண்டு பண்பாடும் நாகரிகமும் நிறைந்த கலைவாழ்க்கையை அமைத்துக் கொள்வதும் இம்மைப் பிறப்பின் பயன். விலங்குகள் இத்தகைய அறிவு நாட்டம் உடையவை அன்று; விலங்குகள் உடல் சார்ந்த இன்ப நாட்டம் உடையவை. மனிதன் பொறி புலன்களின் வேட்கையைத் திருத்தி அறிவுசார்ந்த கலை நாகரிக வாழ்வின்மூலம் விலங்குகளிலிருந்து வேறுபடுகின்றான். பல செல்வர்களும் அரசர்களும் சுகபோக வாழ்க்கை வாழ்வதும், வேட்டை ஆடுவதும், சூதாடுவதும், குடிப்பதும் போன்ற சிற்றின்ப வேட்கை உடையவர்களாக வாழ்ந்து ஒழிந்தனர். சேதுபதி வழிவந்தோர் வாழ்க்கை இதற்கு முற்றிலும் மாறுபட்டதாகும். அவர்கள் வித்வ சபையைப் போற்றுதல், இயல், இசை, நாடகம் ஆகிய கலைகளைப் பேணுதல், ஒழுக்க நெறி நிற்றல் என அரசியல் நெறி வகுத்துக் கொண்டு சேதுநாட்டு அரசை மக்கள் நல

அரசாகப் பாதுகாத்து வந்தனர். அதனால் சேதுபதி அரசர்களுடைய புகழ் உலகமெங்கும் பரவிச் சிந்தித்தற்குரியதாக அமைந்தது. சேதுபதி என்னும் குடிப்பெயர் உலகமெங்கும் மரியாதைக்குரிய குடிப்பெயராக இன்றும் விளங்குகிறது. இதனை ஆசிரியர் 'முறைமையில் தேவையாள் முன்னவர்' எனச் சேதுபதி குடிவழிச் செங்கோல் ஆட்சியை வியந்துரைக்கின்றார். அத்தகைய குடி ஆட்சியை மேலும் ஒளிவீசச் செய்கின்ற வெறிகதிர் மணிமுடியாக நம் பாண்டித்துரையார் சிரத்தையோடு பாதுகாத்து வருகிறார். இவ்வாறு அரசியல் நடத்தும் பாண்டித்துரை பாற்கர சேதுபதிக்கு வயதில் மூத்தவர்; பாற்கர சேதுபதி தம்பி முறை, இளையவர். இளவலாகிய பாற்கர சேதுபதியை இப்பெரியார் எப்பொழுதும் மன்னர் என்றே அழைப்பார். இளையவர் என்பதால் பெயர் சொல்லியோ உறவு முறையால் தம்பி என்பதால் தம்பி என்றோ அழையார். அரசு முறைமையை அறிந்த சான்றோர் இவர். அரசு எப்போதும் ஒளி வீசுவது, அது தூங்குவது இல்லை. அதனால் சேதுபதி ஆட்சி முறைமையைப் போற்றி ஒழுகும் சிரத்தை இவரிடத்தில் ஒவ்வொரு செயலிலும் சொல்லிலும் விளங்கிற்று. இப்பெரியார் எதையும் எதிர்பார்க்கும் இயல்பினர் இல்லை. நெற்றியில் மூன்று கோடுகளை உடைய திருநீற்றை அணியும் இயல்பினர். இத்திருநீற்று இயல்பு மும்மலங்களை நீக்கி உயிர்களைப் புனிதப்படுத்துவதாகும். இதனை ஆசிரியர்,

"புண்டரமாகிய புனித வெண்ணீறு"

எனக் கற்போற்கு எடுத்துரைக்கிறார். முழுமதியும் செங்கமலமும் ஒன்றோடொன்று ஒவ்வாது. ஆனால் இப்பெரியாரிடத்து அவை நாணிக்கிடந்து இவர் முறுவலுக்கு ஏங்குகின்றன. தன்மையால் செங்கமலத்தை ஒத்தும் அருள் ஒளியால் நிலவை ஒத்தும் இவருடைய கண்களும் திருமுகமும் உலகவர்க்கு இன்பூட்டுகின்றன.

"பொங்குதண் ணளிகுலாய்ப் பூரண மதியையுஞ்
செங்கமலத்தையுஞ் சிரிக்கு முகத்தான்"

எனப் போற்றுகின்றார். வறுமை எள்ளற்குரியது. நெருப்பினில் துஞ்சலும் ஆகும். வறுமையில் வாழ்தல் அரிது என்பார் திருவள்ளுவர். அத்தகைய வறுமைத் துன்பத்தை எள்ளுறு மிடி என்றும் தழல் எறுழ் என்றும் ஆசிரியர் குறிப்பிடுகிறார். அவ்வறுமை கெட அருள் வெள்ளம் சுரக்கும் இயல்பினர் பாண்டித்துரையார். மலர் மணம் அண்மையிலும் சேய்மையிலும் பரவி நுகர்வு இன்பம் தருதல்போல அருள்நோக்குடைய பாண்டித்துரை தன்னடைந்த புலவர்க்கும் தன்னை வந்து பரிசில் பெற முடியாதவற்கும் கூட இவரே சென்று மலர்மணம் போல வேண்டும் உதவிகளைச் செய்வார்.

பாண்டித்துரைத்தேவர் சேக்கிழார் சுவாமிகள் எழுதிய திருத்தொண்டர் புராணத்தில் மிக்க ஈடுபாடு உடையவர். சேக்கிழார் பக்திச் செல்வத்தைத் தமிழ் மொழியில் நிலைபெறச் செய்தவர். திருத்தொண்டர் புராணம் நெஞ்சை உருக்கும் இயல்புடையது. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை சேக்கிழாரின் தமிழையும் பக்திச் சுவையையும் உணர்ந்து பக்திச்சுவை நனிசொட்டச்சொட்ட கவிபாடும் கவி வல்லவர் எனப் போற்றுகின்றார். நம் பெருமகனாரும் வினைவயப்பட்ட யாக்கையின் தாக்கம் நீங்கி அன்புருவானவர். அத்தகைய அன்பின் மிகுதிப் பாட்டால் சைவ நாயன்மார்களுடைய வரலாற்றைச் சேக்கிழாரின் தமிழில் படிக்கும் போதெல்லாம் நெஞ்சு நெக்கு நெக்கு உருகி விழிகள் தாரை தாரையாகக் கண்ணீர் வடிக்கும். அக்கண்ணீர் உயிரின் மலம் கழுவும் புனல் என்பர் சான்றோர். நம் பெரியார் இத்தகு நூல்களைக் கற்றும் கேட்டும் பிறர்க்கு உரையாற்றியும் வாழ்ந்த பெருவாழ்க்கை உடையவர். இதனை ஆசிரியர்,

"விழிப்புனல் கால்பொர மெய்த்திருத்தொண்டர்கள் பழிப்பரும்
பாவகை படிக்கும் வாயான்"

எனப் போற்றுகின்றார். இப்பெரியார் அன்புருவானவர் அதனால் நெஞ்சில் ஈரம் மிக்கவர். அவ் ஈரத்தால் அன்பு கனிந்த இனிய மென்மையான சொற்களையே பேசும் இயல்பினர். ஏதேனும் ஒரு வகையில் துன்புற்றவர்களைக் காண நேர்ந்தால் அவர்களுடைய செவி வழியே இவர் சொல்லும் நல்ல உபதேச மொழிகள் அவர்களுடைய மனத்தில் உள்ள துக்கத்தை நீக்கி ஆறுதல் அடையச் செய்யும்.

இப்பெரியார் வாழ்ந்த காலத்தில் கைத்தொழில் வல்ல கொல்லர்கள், பட்டு நெசவு செய்யும் நெசவுத் தொழிலாளிகள் போன்றே உழவுத்தொழிலைச் சார்ந்த கைவினைப் பொருட்கள் செய்கின்ற தொழிலாளர்களே நாடெங்கும் இருந்தனர். உழவர்கள் மாட்டையும் கலப்பையும் பயன்படுத்தினர். ஆங்கிலேயரின் வருகைக்குப் பின்னர் கைத்தொழில் நசிந்தது. நுட்பமாகச் செய்யும் பொன் அணிகலன்கள் பரம்பரையாகத் தமிழகத்தில் சிறப்பாகப் போற்றப்பட்டு வந்தன. அந்நியர் வருகைக்குப் பின் தேசியத் தொழிலாகிய அனைத்துக் கைத்தொழில்களும் எந்திரங்களின் தாக்கத்தால் நலியத் தொடங்கின. அத்தகைய காலகட்டத்தில் நம்முடைய பாண்டித்துரையார் வாழ்ந்து வந்தார். இத்தொழில்கள் நசிந்து போகாமல் இருத்தற் பொருட்டு அரச குடும்பத்தினரும் செல்வர்களும் இத்தகைய கைத்தொழில் உற்பத்திப் பொருள்களை

வாங்கி கைவினைக் கலைஞர்களைப் பாதுகாத்து வந்தனர். இத்தகைய அணிகலன்களை அரச குடும்பத்தினரும் மற்றவர்களும் அணிந்து மகிழ்ந்தனர். கோயில்களில் மூலவர்க்கும் திருவிழாக் காலங்களில் உற்சவ மூர்த்திக்கும் அணிந்து விழா எடுப்பார்கள். கோயில் என்பது அரசர்கள் இருக்கும் இடத்தையும் தெய்வங்கள் இருக்கும் இடத்தையும் குறிக்கும். தெய்வங்களுக்கு உரியது அரசர்களுக்கும் ஆயிற்று. நம் பாண்டித்துறைத் தேவரும் தம் மார்பில் பொன்னாலாகிய சரமும் அழகிய கண்டிகையும் பொன்வடமும் கழுத்தில் அணிந்து வீற்றிருந்ததாக ஆசிரியர் சொல்லி இன்புறுகிறார். மலையொத்த தோள்களில் நவமணிகளால் ஆன ஒளி மிக்க கடகம் அணிந்திருந்தார். மார்பில் உத்தரீயம் அணிந்து விளங்கினார். திருமாலும் விரும்பும்படியான பட்டாடைகளை அணிந்து சபா மண்டபத்தை அலங்கரித்தார். இவைகளெல்லாம் அரசர்க்குரிய புனைவுகள். அரசர் மற்றவர்களுக்கு முன்னால் தோற்றப் பொலிவுடன் இவற்றை எல்லாம் அணிந்து சபாமண்டபத்தில் வீற்றிருத்தல் வழக்கம். அரசர்கள் மரபுவழி நடத்தற்குரியவர்கள். இவரும் அரசராகையினால் இத்தகைய அணிகலன்களை அணிந்து சபையில் தோன்றினார். இவை அனைத்தும் புறக்கோலமே ஆகும். இவருடைய அகம் எப்போதும் திருவருள் சிந்தனையை உடையது. இவருடைய சிந்தையுள்ளும் சிரத்துள்ளும் பந்தமும் வீடுமாகிய அந்தமில் புகழ் இறைவன், மாதவம் செய்த பேற்றினால் நிறைந்துள்ளான். அதனால் இவருடைய சிந்தை நெக்குருகிப் பக்தியுடன் சிவஅர்ச்சனையில் ஈடுபடும். அதனால் பரம்பொருளைப் பரவிய பாங்கினால் குற்றமில்லாத பெரும்புகழ் இவரைத் தழுவி நிற்கிறது. இப்படி இவர் தோற்றத்தில் அரசராகவும் அகத்தில் பற்றில்லாத அருள் முனிவராகவும் வாழ்வதற்கு இப்பெரியார் மேற்கொண்ட தவத்துறை எண்ணிப் பார்த்தற்குரியது. தவமும் தவமுடையார்க்கு ஆகும். இப்பெரியார் தவம் செய்வார் தம் கருமம் செய்வார் என்னும் கூற்றுக்கு ஒப்ப வாழ்வே தவமாக உடையவர். இவருடைய வாழ்க்கை நெறி தவநெறி என்பதை,

"சிந்தைநெக் கியற்றிடுஞ் சிவார்ச்சனைப் பத்தியான்
பரவிய பெரும்புகழ்ப் பாண்டித்
துரைதவ மேதவத் துறையினில் வாய்ந்ததே"

என ஆசிரியர் நுட்பமாக எடுத்துரைக்கின்றார்.

நூலோர் செய்தி

வெண்பா

வாய்ந்த சிவபத்தி மாறாப்பாண் டித்துரையே
யீந்தவர்மாய்ந் தாலு மிருந்தவரே – மாய்ந்தவர்கண்
மாய்ந்தவரா காரிரந்தார் வாழ்ந்திடினு மாய்ந்தவரென்
றாய்ந்தவர்கள் சொன்னா ரறி. (39)

சிவபக்திச் செல்வம் எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. முன் பல பிறவிகளில் செய்த முயற்சியின் பயனாக இப்பிறப்பில் சிவபக்தி வாய்க்கும். சிவபக்தி வாய்த்தவர்களும் கீழ் மக்களது தொடர்பால் சிவபக்திச் செல்வத்தைப் பாதுகாக்காது மறந்து விடுவர். நம் பெரியார் பாண்டித்துரை எப்போதும் சான்றோர் இனத்தோடு வீற்றிருக்கும் மாண்புடையவராகையினால் "வாய்ந்த சிவபக்தி மாறாப் பாண்டித்துரையே" என ஆசிரியர் இவருடைய சிவபக்திப் பேற்றை நமக்கு அறிவுறுத்துகிறார். இப்பேற்றினால் இப்பெரியார் பொருள் நசை இல்லாதவராக விளங்குகிறார். கடும் பற்று கயவர் இயல்பு. நம் பாண்டித்துரையார் அருள் நெஞ்சினர். அதனால் ஈயும் இயல்பினர். கொடுப்பவன் புகழ் உயர்ந்தது. மேல் உலகம் இல்லை எனினும் ஈதலே சிறந்தது என்பர் நம் ஆசிரியர். ஈபவர் இறப்பதே இல்லை என உரைக்கிறார். பூத உடம்பு மறைந்தாலும் புகழ் உடம்பு என்றும் நிலைத்திருக்கும் என்பதை ஈண்டவர் மாய்ந்தாலும் இருப்பவரே எனப் பாண்டித்துரையின் அழியாப் புகழைப் போற்றுகின்றார். 'உள்ளது சிதைப்போர் உளர் எனப் படார்'. இல்லோர் வாழ்க்கை இரவினும் இழிந்தது என்பது சான்றோர் கூற்று. பொருளைப் பாதுகாத்தலின் நோக்கம் ஈதலும் இசைபட வாழ்தலுமே ஆகும் என்று ஆசிரியர் உயிர்க்கு ஊதியமாகிய ஈதலை வலியுறுத்தி, அதுவே உயிர்க்கு நிலையாமையாகிய இவ்வுலக வாழ்க்கையை நிலைபேறுடையதாகச் செய்வது ஆகும் என்ற நுட்பத்தையும் ஆசிரியர் குறிப்பாக உணர்த்துகிறார். இதனை ஆசிரியர் 'ஆய்ந்தவர்கள் சொன்னார் அறி' என்னும் தொடரில் ஆய்ந்தவர்கள் என்பது நூலாராய்ச்சி மிக்கவர்களையும் எண் வகைத் தவயோக முயற்சி உடையவர்களையும் குறிக்கும். மெய்ப்பொருள் உணர்ந்தவர்கள் பொருட் பற்றும் காமஉணர்வும் மெய்ப்பொருள் வாழ்விற்கு ஆகா என நீக்குவர். பொருளைப் போற்றிப் பிறர்க்கு ஈயாது கடும் பற்றுள்ளத்தோடு வாழ்தல் தீ நெறிக்கே இட்டுச் செல்லும். அவர்கள் வாழ்ந்தாலும் இறந்தவர்களே. பொருட் பற்றின்றி அவா அறுத்தவர்களே வீடு பேற்றிற்கு உரியவர்கள் என்பது நூல்களின் துணிபு. ஆசிரியர் திருவள்ளுவரும் அதனாலேயே திருக்குறளின் மெய்யுணர்வு என்னும் அதிகாரத்தைத் தொடர்ந்து அவா அறுத்தல் என்னும் அதிகாரத்தை இறுதியில் வைத்துள்ளார். ஒருவன் முடிந்த முடிவாகப் பெறுதற்குரிய பேறு வீடு பேறே ஆகும். அவ்வீடு பேற்றை அவா அறுத்தவரே பெற முடியும். பற்றுள்ளம் கொண்டவர்கள் ஒரு காலத்தும் அதற்குரியவர் ஆகார். அதனால்

ஆசிரியர் ஆய்ந்தவர்கள் என்ற சொல்லைத் திட்ப நுட்பத்தோடு எடுத்தாண்டுள்ளார். பாண்டித்துரையாரின் வாழ்க்கை ஈதலும் இசைபட வாழ்தலுமாகிய புகழ் நெறியே ஆகும். அதனைப் போற்றி ஆசிரியர் இப்பாடலை அமைத்துள்ளார். 'அடியின் சிறப்பே பாட்டு எனப்படும்' என்பது தொல்காப்பியம். இவ்வறிஞர் பாண்டித்துரையின் வாழ்வை ஒவ்வொரு அடியிலும் நிலைபேறுடையதாகச் செய்துள்ளதற்கு இப்பாடல் நல்ல சான்றாகும்.

வாழ்த்து

கலித்துறை

அறிவா லுயர்ந்திடும் பாண்டித்
துரைச்செல்வ வான் றவர்கள்
செறிவா லுயர்புரு டோத்தம
னேயிட்ட சித்திகளு

மெறிவா ரிதிப்புவித் தீர்க்கா
யுளுமென் னிதையத்தமர்
நெறிவார் குழல்வள்ளி கொண்க
னருளு நினக்குவந்தே. *(40)*

இப்பெரியாருடைய பிறப்பு புண்ணியத்தின் பாலதாகும். நன்னெறி ஒழுகும் சேதுபதி குடும்பத்தில் பிறந்து அறிவாராய்ச்சி மிக்கவராக விளங்கி, சான்றோர் இனத்தோடு இருக்கும் பேறும் இப்பெரியாருக்கு வாய்த்தது. செல்வக் குடிப்பிறப்பும் அறிவாராய்ச்சியும் சான்றோர் இனமும் வாய்க்கப் பெற்ற இவர் காட்சிக்கு எளியராகவும் இன்சொல் உடையவராகவும் தண்ணளி உடையவராகவும் விளங்கினார். பலபிறவிகளில் முயன்று இப்பிறப்பில் இத்தகைய பேறுகள் வாய்க்கப் பெற்றோர் இறைவனை ஒத்தவராவர். இறைவன் புருடோத்தமன் என வேதங்கள் போற்றும்; அத்தகைய பேறுகள் வாய்க்கப் பெற்ற இப்பெரியாரும் அத்தகு மாண்புடையவராவர். ஆழ்வார் பெருமாளுக்குக் கண்ணேறு படுமென்று பல்லாண்டு பாடுவர். நம் ஆசிரியரும் பாண்டித் துரையார்க்குப் பல்லாண்டு உரைக்கின்றார். பாண்டித்துரையாரைப் போலவே ஆசிரியர் சிவசம்புப் புலவரும் முருகக் கடவுளை இதயக் கமலத்து வைத்துப் போற்றும் நெறியாளர். அதனால் வள்ளி மணவாளனைப் பாண்டித்துரையார்க்கு அவர் உள்ளம் விரும்பும் சித்திகளும் கடல் சூழ்ந்த இவ்வுலகத்துத் தீர்க்காயுளும் வேண்டித் துதிக்கின்றார். அன்புடையவர்களை வாழ்த்தும் போது அரோக திடகாத்திர

சிரஞ்சீவியாக வாழ்க எனப் பெரும்புலவர் நல்லூர் ஆறுமுக நாவலர் அக்காலத்தில் எழுதுவார். இவரும் நல்லூர் ஆசிரியன்மார்களிடத்திலே படித்தவர். ஆகையினால் நம் பாண்டித்துரைத் தேவரை தீர்க்காயுளுடன் இட்ட சித்திகளும் பெற்று வாழ வேண்டும் என்று முருகவேளை வேண்டுவது வழிவழி வந்த அன்பின் வெளிப்பாடே ஆகும்.

இசையும் வசையும்

வந்தனை யன்பர் மனத்திடைச் சேக்கும்
வதனமு விரண்டுடை வேலோன்
கந்தனின் னருளிற் காட்டவுண் ணம்பிக்
கழறிப்பாக் காதலி னுய்த்தே
னிந்திர னிகர்பாண் டித்துரைத் தேவ
யாதுநீ செய்யினு மதனால்
வந்திடு மிசையும் வசையுநின் பாலே
மன்றவென் றும்வளர்ந் திடுமே. (விருத்தம்)

பாண்டித்துரைத் தேவர் கலைஞர்களுடன் சபாமண்டபத்தில் வீற்றிருக்கும் இயல்பினர். இந்திரனும் எப்பொழுதும் கலைஞர்களுடன் வீற்றிருந்து கலையை அனுபவிக்கும் இயல்பினன். கலை இன்பம் நுகர்வதில் இருவருக்கும் உவமை பொருந்தும். பாண்டித்துரை பயனில் இன்பம் நுகரும் இயல்பினர் அன்று. இவர் மெய்ப்பொருட் கலையையும் கல்வியையும் காதலிக்கும் இயல்பினர். மாசு மறுவற்ற இயல்பினர். அதனால் இவருக்குக் கலைஞர்களைப் பாராட்டிப் பரிசில் வழங்குவதால் புகழ் தானே வந்து இசை சேர்த்தது.

அகல் விசும்புளார் கோமான் இந்திரன் ஐந்து புலன்களையும் நெறியில் நிறுத்தாததால் முனிவருடைய சாபத்திற்கு ஆளானான். அவன் தன் செயலுக்குந் தண்டனை பெற்று உலகவர்முன் வசையுற்றான். பாண்டித்துரைத் தேவர் புகழுக்குரியவர். இந்திரன் அத்தகையவன் அல்லன். நின்னைப் பாடும் பேறு ஆறுமுகங்களை உடைய கந்தனின் அருளால் பெற்றேன். முருகக் கடவுள் தன்னை வழிபடும் அடியவர்களுடைய உள்ளக் கோயிலில் வாழுகின்றான். பாண்டித்துரைத் தேவரும் அன்பர்களுடைய உள்ளத்திலிருந்து நீங்குவதில்லை. அவருடைய நல்லொழுக்கம், அன்பு, தயை போன்ற அருள் குணங்கள் அவரை அறிந்தவர் மனத்திலிருந்து நீங்குவதில்லை. கந்தனை ஒத்த அருளாளன் ஆகிய நின்னைக் காதலின் விரும்பி இந்த நான்மணிமாலையைப் பாடும் பேறு பெற்றேன்.

அகவல்

வளந்திகழ் தேவையா மாண்பதி வாசன்
றளந்திகழ் தளவத் தார்த்தொடை வாசன்
றன்னிகர் பொன்னுச் சாமிமான் மருமா
னன்னய மாரகு நாயகன் மருமான்
பாற்கர சேது பதிக்கு மூத்தோன்
நூற்கடல் கடந்த நுண்மையின் மூத்தோன்
ஆலய மடங்களி லறாப்பல பணியான்
மேலவ ரெலாம்புகழ் வியன்குணப் பணியான்
சைவமாண் கதிரொடு தழைத்த கனலி
யெவ்வமாம் புறவன மெரித்த கனலி
கந்தனெம் பெருமான் கவியுறு பத்தியான்
சந்ததஞ் சற்சன சங்கமார் பத்தியான்
மந்தவந் தின்பொடு வையையார்நாட்டினான்
முந்தையோ ரிசைபோன் முதிரிசை நாட்டினான்
நிலமயி லோடிரு நிறத்து மணந்தான்
குலவலா மாதரைக் குறைவற மணந்தான்
முக்கணா னருச்சனை முறைவழா மனத்தான்
சக்கரத் தொடுகரந் தங்கிய மனத்தான்
கலிவெயி லொழித்திடுங் கைக்கந் தரத்தான்
பொலிதரு கண்டிகை பூண்டகந் தரத்தான்
அருட்கவிப் பாரா யணமறா வாக்கினான்
தெருட்கழ கம்பல திருந்துற வாக்கினான்
பால வனத்தப் பதியினைப் போற்றுவோன்
சீலமெய்த்தொண்டரைத் திருக்கறப்போற்றுவோன்
என்ன வருந்தகு மிதுவென வுளத்தா
னொன்னலர் துயர்க்கு முதவிடு முளத்தான்
றானுங் கவியெனுந் தருக்கறத் தணிவா
னேனையர் கவித்தொடை யிதையமொத் தணிவா
னோய்வுறும் விருத்தர்பா லோங்குமே மத்தான்
மேவுமிற் கண்டரு மிக்கவே மத்தான்
றுதிவளர் பாண்டித் துரைதன்
விதிவளர் சீரின் மேலெது சீரே.

இவருடைய தந்தையார் பொன்னுசாமித் தேவர் சேதுபதி

நாட்டின் அமைச்சர். அரசர்க்கு உறுதி கூறும் திறத்தால் அரசருடைய பெரு மதிப்பைப் பெற்றவர். அதோடு நாட்டு மக்களுடைய நன் மதிப்பையும் பெற்றவர். அதனால் பொன்னுசாமித் தேவர் சேதுபதி நாட்டின் அரசராகவே மதிக்கப்பட்டார். திருவுடை மன்னன் ஆகையினால் திருமாலை ஒத்து விளங்கினார். அத்தகைய பொன்னுசாமித் தேவரின் மகன் என்பது உலகியலில் பெரும் மதிப்பைத் தந்தது. சேதுபதி அரசபரம்பரையில் சேது இரகுநாத சேதுபதி புகழ்மிக்க மன்னர். அவருடைய வழித்தோன்றல் என்பதும் இப்பெரு மகனாருக்குப் பெருமை அளித்தது. இவருடைய இளவல் பாற்கரசேதுபதி. அவருக்கு இப்பெரியார் அண்ணன் என்பதும் உலகவர் முன்னிலையில் அரசர்க்குரிய பெரு மதிப்பை அளித்தது; அகலாது, அணுகாது தீக் காய்வார் போல இவரிடத்தில் அரச மரபு அறிந்து உலகத்தவர்கள் நடந்து கொள்வர். இவை எல்லாம் குடிப்பிறப்பால் வந்த பெருமிதம்.

இவர் ஈட்டிய பெருமை தற்தகைமையால் வந்ததாகும். தானே தன்னைத் தலையாகச் செய்து கொள்வது கல்வியினால் ஆகும். அதனால் நூலாசிரியர் பாண்டித்துரையாரை நூற்கடல் கடந்த நுண்மையின் மூத்தோன் எனப் போற்றுகின்றார். இவர் நுட்பமான கேள்விச் செல்வம் உடையவர். அதனால் வணங்கிய இன்சொல் பேசும் இயல்பினர். நூற்கடல் கடந்த நுட்பத்தின் பயன் வணங்கிய வாயினராதல் எனத் திருவள்ளுவர் குறிப்பிடுவர். அத்தகு சீலம் உடையவர் பாண்டித்துரைத் தேவர் என்பதை நூலாசிரியர் நுண்ணிதின் உணர வைக்கிறார். இப்பெரியார் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர் ஆகையினால் செல்வத்தின் பயன் என்றும் அழியா வகையில் மக்களைச் சென்றடைய வேண்டும் என்னும் துணிவினர். அக்காலத்தில் கோயில்களும் மடங்களும் மக்களுடைய கலை, கல்வி, சமூக நிகழ்ச்சிகள் அனைத்தையும் பராமரித்து வந்தன. அனைவருடைய வழிபாட்டுத்தலமாகவும் அவைகள் விளங்கின. அதனால் வழிவழியாக வந்த அம்மரபுச் செல்வங்களைப் பாதுகாக்கும் பொருட்டு நற்பணிகளைச் செய்து அவற்றைப் பாதுகாத்தார். இவருடைய சீல மாண்பினை மனிதர்களும் தேவர்களும் புகழ்ந்தனர். இப்பெரியார் நெருப்பினை ஒத்த தூய்மை உடையவர். அத்தூய்மைக்கு ஒளி சேர்ப்பது இவருடைய சைவ மாண்பு ஆகும்.

அதனை,

"சைவமாண் கதிரொடு தழைத்த கனலி"

என இப்பெரியாரின் சைவ நுட்பம் தோ்ந்த ஒழுக்க வாழ்வையும் குற்றமாம் முள் புதர்க் காடுகளை எரிக்கும் குற்றம் கடியும் கனலை ஒத்த இயல்பினையும் ஆசிரியர் உருவகம் செய்திருப்பது கற்கின்றவருடைய நெஞ்சில் நீங்காத சொல்லோவியமாகப் படைக்கப்பட்டுள்ளது. இப்பெரியார், இறைவனைப் போற்றும் இயல்போடு அவன் அடியார்களையும் இறைவனாகவே பார்ப்பார். இப்பெரியார் சிவஞானபுரத்து முருகன் மீது காவடிச் சிந்தும் இராஜ இராஜேஸ்வரி பதிகமும் பாடியுள்ளார். அது போலவே, இறைவனுடைய அடியாராகிய சிவஞான சுவாமிகள் மீது இரட்டைமணிமாலை பாடியுள்ளார். இறைவனையும் இறைவனுடைய அடியார்களையும் இப்பெரியார் உள்ளக் கமலத்தில் வைத்து வழிபடும் இயல்பினர். அதனை ஆசிரியர்,

"கந்தனெம் பெருமான் கவியுறு பத்தியான்
சந்ததஞ் சற்சன சங்கமார் பத்தியான்"

எனப் போற்றுகின்றார். வையை ஆறு சேதுபதி நாட்டில் பாய்வதினால் நீரும் உணவும் வாழ்வும் மக்களுக்கு இனிது கிடைக்கின்றன. வையை ஆற்றிற்குச் சேதுநாட்டு மக்களும் அதன் தலைவர்களும் என்றும் நன்றியுடையவர் ஆவர். அவ்வையை நதிபோல் இப்பெருமகன் மக்களுக்கு உயிராக இருக்கின்றார். சேதுபதி குடிப்பிறந்தோர் ஒழுக்கத்தாலும் கல்வி கேள்வியாலும் நாடு பரிபாலிக்கும் திறத்தினாலும் பெரும் புகழ் ஈட்டிய பெருமக்கள்; அவர்கள் புகழெல்லாம் தனதாகச் செய்தவர் இப்பாண்டித்துரை. இவர் நில மகளோடு திருமகளையும் கலைமகளையும் மணந்தவர். திருத்தக்கதேவர், சீவக நம்பி உருவகமாக, குணங்களை மணந்தான் என்பதை அச்சிறப்புக்குரிய பெண்களை மணந்ததாகக் காப்பியம் செய்வார். அதுபோல் நம் ஆசிரியர் சிவசம்புப் புலவரும்,

"நிலமயி லோடிரு நிறத்து மணந்தான்
குலவலா மாதரைக் குறைவற மணந்தான்"

எனச் சீவக நம்பியை ஒத்த பாண்டித்துரை நம்பி காப்பிய நாயகனாகப் போற்றும் தகுதியுடையவர் என்கிறார். ஆனால் கவிபாடிப் பெருமை

செய்ய கம்பன் இல்லை, திருத்தக்கத் தேவரும் இல்லை. ஆயினும் பெரும்புலவராகிய சிவசம்புப் புலவர் பாண்டித்துரைத் தேவரை நான்மணிமாலை பாடி அவருடைய வாழ்வு நலங்களை இலக்கியமாக்கி இருப்பது இன்புறத்தக்கதாகும். சிவசம்புப் புலவருக்குத் தமிழ் உலகம் என்றும் கடப்பாடுடையதாகும்.

நம் பாண்டித்துரைத் தேவர் சைவனாகிய சிவனைச் சலம் பூவோடு தூபமும் தமிழோடு இசையும் கமழ அர்ச்சனை செய்யும் இயல்பினர். "அரி அல்லால் தேவி இல்லை ஐயன் ஐயாறனார்க்கே" என்னும் அப்பர் சுவாமிகளின் வாக்கின்படி சங்குசக்கரத்தோடு சிவனுடைய மனைவியாகிய அறம் வளர்த்த நாயகி சக்கரம் ஏந்திய கோலத்தோடு திருவையாற்றில் வீற்றிருக்கிறார். எனவே திருமாலின் வடிவமாகிய சக்கரம் ஏந்திய கடவுளாகிய அறம் வளர்த்த நாயகியையும் மனத்தில் பதிய வைத்துள்ளார். பாலை நிலத்தில் வெயில் போலத் துன்புறுத்தும் வறுமையை ஒழித்திடும் கொடைக்கைகளை உடைய பாண்டித்துரை கழுத்தில் கண்டிகை (உருத்திராட்சம்) அணிந்து திருநீற்றுப் பொலிவோடு அருளாளர்களுடைய தேவாரம் திருவாசகம் போன்ற அருட்கவிகளைப் பாராயணம் செய்யும் பெருவாழ்வுடையவராக விளங்கினார். இப்பெரியார் தான் மெய்ப்பொருள் கல்வி பெற்றது போல உலகத்தவர்களும் பெறுவதற்காக மதுரைத் தமிழ்ச் சங்கம் மற்றும் ஊர்கள் தோறும் உள்ள பெரியவர்களைக் கண்டு சைவ நெறிக் கழகங்களைத் தோற்றுவித்தார். இவர் பாலவநத்தம் என்னும் நகரின் குறுநில ஆளுகை உடையவர். அதனை இவர் சீருறப் போற்றிப் பாதுகாத்தார். பெரியவர்களாயினும் பலர் மனக் குற்றமுடையவராக இருப்பர். அவர்களுடைய திருகலாகிய சிந்தை திருத்திச் சீலமும் நோன்பும் உடையவராக வாழும் நெறியைக் காட்டினார். இப்பெரியார் நன்மைதீமைகளை ஏற்றுக் கொள்ளும் இயல்பினர். தனக்குறும் இன்பதுன்பங்கள் பிறரால் வருவதில்லை. அது தானே ஈட்டியது என உள்ளத்தில் உணர்ந்து வாழும் பக்குவ வாழ்வினர். அதனால் இவர்க்கு வேறுபாடு இல்லை. எல்லோரையும் ஒரு நிலையில் ஒத்த தன்மையோடு பார்க்கும் இயல்பினர். எல்லோர்க்கும் உதவிடும் உள்ளம் உடையவர். இப்பெரியார் பெரும் புலவர்களும் முனிவர்களும் விரும்பிப் போற்றும் கல்விகேள்வியும் கலைமகள் அருளால் இயல், இசைப் பாக்கள் புனையும் வித்தகமும் உடையவர். இத்தகு கவிப்புலமை உடைய பலர் தறுக்கித் திரிவர். இவருக்கு அத்தகைய

செருக்கு ஒரு காலத்தும் இருந்ததில்லை. விளைந்த கதிர் தலைகவிழ்ந்து பழுத்திருப்பது போலப் பணிவான இயல்புடையவராக விளங்கினார். பிறருடைய கவிதைகளில் உள்ள நயத்தையும் கவிஞனுடைய கவிதை நோக்கத்தையும் கண்டு கண்டு இன்புற்றுப் பாராட்டிப் பரிசில் வழங்கி அக்கவி மாலைகளை அணிந்துரைத்து இன்புறுவார். வளர்ச்சியும் நாகரிகமும் மிக்க செல்வ நாடுகளில் நோயுற்றவர்களையும் வயது முதிர்ந்தவர்களையும் உடல் குறைபாடு உடையவர்களையும் தாயினும் மிக்கப் பரிவோடு அரசும் சமூகமும் பாதுகாத்து வருகின்றன. நம் பாண்டித்துரைத்தேவர் நூறு ஆண்டுகளுக்கு முன்பு இத்தகைய சமூக விழிப்புணர்வோடு வாழ்ந்துள்ளார் என்பதை ஆசிரியர்,

"நோயுறும் விருத்தர்பால் ஒங்கும் ஏமத்தான்"

எனச் சொல்நயம் தோன்றப் பாடுகின்றார். 'கறைவளர் கண்டத்தை உடைய இறைவன் இப்பெரியார்க்கு என்றும் இன்புறும் ஏமத்தானாகவும் இவருடைய நாளும் கோளும் இவருடைத் தவமும் நன்மையுடையதாகவும்' என வாழ்த்துகிறார். பாண்டித்துரைத் தேவர் இந்த நூற்றாண்டின் மணிமகுடங்களாகிய பல நிகழ்வுகளுக்கு முன் நின்றவர். பல கோபுரங்கள் பார்வையில் படும். ஆனால் அதைத் தாங்கிப் பூமிக்குள் இருக்கின்ற உறுதியான கட்டுமானம் பற்றி யாரும் சிந்திப்பதில்லை. இன்று தமிழ் வரலாற்றில் கோபுரங்களைப் போல உள்ள பல வெற்றிகளுக்கு அடித்தளமிட்டவர் பாண்டித்துரைத் தேவர் என்பதை அறிஞர் உலகம் அறியும். அத்தகைய பாண்டித்துரைத் தேவரின் படைப்புக்களையும் வெளிப்புறக் கட்டுமானங்களையுமே அறிந்த நமக்குப் பாண்டித்துரையின் உள்ளீடு குறித்துச் சிவசம்புப் புலவர் அருளிய நாற்பது அரிய தமிழ்ப் பாடல்கள் நம்முடைய மனத்தில் கவிதையின் ஆழ்ந்த பக்தி உணர்வையும் ஆளுமையையும் வெளிப்படுத்துகிறது. மேலும் சிவசம்புப்புலவர் பாடல்கள் காதலாகி கசிந்து உள்உருக்கும் தெய்வத்தமிழ்ப் பாக்களாக அமைந்து என்றும் வாடா மலராக மணம் பரப்பிக் கொண்டிருக்கிறது. பூவினுள் நாற்றம் போல இப்பாக்களும் கவி இன்பம் தந்து தமிழ் மணம் பரப்புகிறது.

❀ ❀ ❀

மு. இராகவையங்காரின் செந்தமிழ்ப் பணி

முதுமுனைவர் ம.சா. அறிவுடைநம்பி,
தமிழ்ப் பேராசிரியர், சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம்,
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி 605 014.

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய தமிழ் அறிஞர் பெருமக்களுள் மு. இராகவையங்காரும் ஒருவர். தமிழறிஞராக, இதழாசிரியராக, வரலாற்றாசிரியராக, பதிப்பாசிரியராக, உரையாசிரியராக, இலக்கிய ஆசிரியராக, கவிஞராக விளங்கிய பெருமை இவருக்குண்டு. பாண்டித்துரைத் தேவரவர்களால் 1902ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட செந்தமிழ் இதழின் பதிப்பாசிரியராக 1906ஆம் ஆண்டு முதல் 1910ஆம் ஆண்டு வரை இருந்து இவர் ஆற்றிய பணிகளை இக்கட்டுரை ஆராய்கிறது.

தமிழ்க் கல்வியைப் பரப்புவதற்காகவும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செய்திகளை வெளியிடுவதற்காகவும் தொடங்கப்பட்ட செந்தமிழ் எனும் திங்களிதழின் முதல் பதிப்பாசிரியராக ரா. இராகவையங்கார் 1902 முதல் 1906 வரை இருந்தார். இவருக்கு உறுதுணையாகத் துணைப்பதிப்பாசிரியராக அன்னாரின் மருமகனான மு. இராகவையங்கார் இருந்தார்.

> "தமிழ்க் கல்வியிலும் தமிழாராய்ச்சியிலும் பேரவாக் கொண்ட தமிழ்மக்கட்கு உறுதுணையாய் நின்றது செந்தமிழ்ப் பத்திரிகையேயாம். ஒவ்வொரு மாதத்துப் பத்திரிகையிலும் அதுவரை அறியாத அரிய விஷயங்களைக் குறித்துச் சிறந்த கட்டுரைகள் பல வெளிவந்து கொண்டேயிருந்தன. பத்திராசிரியர் எழுதியனவெல்லாம் தமிழ்மணமும் ஆராய்ச்சி நலமுஞ் செறிந்து விளங்கின கற்பார்க்குப் பெருவிருந்தாயமைந்தன. ஒவ்வொரு மாதமும் செந்தமிழ் எப்போது வெளிவருமென்று பேராவலோடு தமிழன்பர்கள் எதிர்பார்த்த வண்ணமாயிருந்தார்கள். தமிழ்

நாட்டுப் பெரும் பேராசிரியனா யமைந்து, தமிழ்மக்கள் வீடுதொறுஞ் சென்று, தமிழ்க் கல்வி நலத்தை அவர்கள் நுகரும்படி செய்துவந்த பெருமை செந்தமிழ்ப் பத்திரிகைக்கே உரியதாயிருந்தது. இப்பத்திரிகையின் உயிர் நிலையாயிருந்தவர்கள் ஸ்ரீ மு. இராகவையங்காரவர்களே. பலர் சிறந்த தமிழறிஞர்களாக விளங்குவதற்கும், அறிவுநலமிக்க பலர் தமிழாராய்ச்சியை மேற்கொள்ளுதற்கும் இவர்களே காரணமாயிருந்தார்கள்"

(ச. வையாபுரிப்பிள்ளை, தமிழ்ச்சுடர் மணிகள், பக்.392–393)

இவ்வாறு ச. வையாபுரிப்பிள்ளை செந்தமிழ் இதழைப் பற்றியும் அதன் ஆசிரியராக இருந்த மு. இராகவையங்காரைப் பற்றியும் கூறியிருப்பதும் இவண் நினைவுகூர்தற்குரியது.

'செந்தமிழ்' இதழில் 66 கட்டுரைகள் இவரால் எழுதப்பட்டு வெளிவந்துள்ளன. இலக்கியம், இலக்கணம், வரலாறு, மூலபாடம் ஆகிய தலைப்புகளில் இக்கட்டுரைகள் அடங்குகின்றன. இக்கட்டுரைகளில் சில அக்காலத்தில் பல்வேறு விவாதங்களுக்கு இடந்தந்து நின்றுள்ளன. சில கட்டுரைகள் மறுப்பதற்கென்றே எழுதப்பட்டுள்ளன. மறுப்பதற்குத் தகுந்த காரணங்கள் பலவற்றைச் சான்றுகளுடன் மு. இராகவையங்கார் தம் கட்டுரைகளில் தருகின்றார். சேர வேந்தர் தாயவழக்கு, சேர நாட்டின் தலைநகரம் வஞ்சியா? கருரா? என்ற இவ்விரண்டும் பற்றி இவரும், நாவலர் ச. சோமசுந்தர பாரதியாரும் எழுதிய கட்டுரைகள் ஆராய்ச்சிக்கு இடந்தந்து நின்றன.

சில கட்டுரைகள் எழுத நேர்ந்தமைக்குரிய காரணங்களைக் கட்டுரையின் தொடக்கத்தில் கூறும் பழக்கத்தை இவரிடம் காணமுடிகிறது. பல கட்டுரைகளின் முன்னுரையில் அல்லது கட்டுரைத் தலைப்பில் உடுக்குறியிட்டு அதன் அடிக்குறிப்பில் அக்கட்டுரை எழுத நேர்ந்ததற்கான காரணத்தைக் கூறுவதை மரபாகக் கொண்டிருப்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

'செந்தமிழ்' இதழில் தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதையர் இறைவன் திருவடி நீழலடைந்த பொழுது பாடிய 12 கவிதைகளும், சேதுபதியின் 34ஆவது வெள்ளணி நாள் விழாவையொட்டிப் பாடிய 5

கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. இக்கவிதைகள் பாடியதன் மூலம் இவர் ஒரு கவிஞராகவும் விளங்கியதைக் காணமுடிகிறது.

மதுரைத் தமிழ்ச் சங்கத்திலுள்ள நூல்களில் அருமையான சில நூல்களைப் பற்றிய சிறப்புச் செய்திகளை 'நூலாராய்ச்சி' எனுந் தலைப்பில் எழுதியுள்ளார்.

"புரூரவா சரிதை இந்நூலை இயற்றியவர், தென்காசி ஆண்டவரராம பாண்டியனது அவையிற் பெரும்புலவரான சிவந்த கவிராயர் மருகர் அய்யம்பெருமாட் சிவந்த கவிராயராவர். தென்காசியிலிருந்த கச்சிராமையர் புத்திரரான பிரபு ஒருவரது வேண்டுகோளின்படி இந்நூல் இயற்றப்பட்டது. 920 பாடல்கள் கொண்ட இந்நூல் 27 படலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சந்திரகுல விளக்காய் விளங்கிய புரூரவ சக்கரவர்த்தியின் வரலாறு மகாபாரதத்தில் மிகச் சுருக்கமாகவே சொல்லப்பட்டுள்ளன. ஆயின், அதில் இல்லாத கதாசந்தர்ப்பங்கள் அநேகம் இந்நூலுட் காணப்படுகின்றன. இவற்றுக்கு மூலம் இன்னது என்பது அறியப்பட்டிலது. கதைப் போக்கானது அரிச்சந்திர சரிதையைப் போன்று உள்ளது. நாடு, நகரம், இளவேனிற் பருவம், போது கொய்தல், புனல் விளையாட்டு முதலான படலங்களிலும், பிற இடங்களிலும் கூறியிருக்கும் கற்பனைகளும் வருணனைகளும் கருத்துக்களும் பெரிதும் அருமைப்படத்தக்கனவாய் உள்ளன" (செந்தமிழ் 6, 1907-1908, பக். 81-89)

என்று இந்நூலைப் பற்றிக் கூறிய ஐயங்கார் நூலாராய்ச்சியை எழுதும் முயற்சியைத் தொடராமல் விட்டுவிடுகிறார். இதற்குரிய காரணம் எதுவெனத் தெரியவில்லை.

செந்தமிழ் இதழின் பதிப்பாசிரியராக இருந்த காலத்தில் 'பத்திராசிரியர் குறிப்புகள்' எனுந்தலைப்பில், நூல் பதிப்பிக்கும்பொழுது நூலுக்கு முன்பகுதியிலும், சிலர் எழுதிய கட்டுரைகளில் ஐயங்கள் ஏதாவது எழுமாயின்அவற்றைக் குறிப்பிட்டுச் சில விளக்கங்களையும் எழுதியிருக்கின்றார்.

'புத்தகக் குறிப்புகள்' எனுந்தலைப்பில் அந்தக் காலத்தில் வெளிவந்த நூல்களைப் பற்றி 'மதிப்புரை' எழுதியுள்ளார். நூலாசிரியரைப்

பற்றியும், நூலைப் பற்றியும் பாராட்டிக் கூறுவதாகவே இம்மதிப்புரைகள் அமைந்துள்ளன. சில நூல்கள் அறிமுகம் மட்டும் செய்து வைக்கப்படுகின்றன. இவ்வாறு 62 நூல்களைப் பற்றிய குறிப்புகளை இப்பகுதியில் ஐயங்கார் எழுதியுள்ளார். சான்றுக்கு ஒரு நூலின் மதிப்புரையை இவண் காண்பது பொருந்தும்.

"இராஜாம்பாள்: இது சென்னை ஸ்ரீமத்-ஜெ-ஆர்.ரங்கராஜா அவர்களால் எழுதப்பெற்ற துப்பறியும் நவீனகங்களில் ஒன்று. மேற்றேயத்துக் கல்வியின் பெரும் பயனாக நாம் அடைந்துவரும் அநேக நன்மைகளில் உள்ளோன் தலைவனாகவும் இல்லோன் தலைவனாகவுங் கொண்டு, ஒரோவழி ஒருசாரார்மாட்டு நிகழும் ஒழுக்கங்களைச் சிலரிடத்தேற்றி இடமும் காலமுமுதலாயின நியமித்துக் கூறும் இத்தகைய கற்பித சரிதங்களும் ஒன்றாம். இக்கதைகள், பொழுதை இனிதாகப் போக்கற்குரிய கருவிகளில் ஒன்றாயினும், அதனால் அடைதற்குரிய நன்மைகளும் அனந்த மென்பதில் ஐயமில்லை. நல்லறிஞர்களால் வெளிவரும் கற்பித சரிதங்கள் சாதாரண நிலையிலுள்ள ஒருவனை உலகியல் நன்கறிந்தவனாக்கவல்லன என்பது திண்ணம். ஆங்கில முதலிய மேனாட்டு மொழிகளில், அறிவாளர்களால் எழுதப்பெற்ற கதைகள், அந்நாட்டாரது லௌகீகஞானத்தின் அளவற்ற பெருமைக்கு ஒரு காரணமென்று சொல்லலாம். இத்தகைய சரித்திரங்கள் சில நம்மவரும் தமிழில் எழுதிவருகின்றனராயினும், அவற்றில் தலைசிறந்து எல்லா வழியாலும் உபயோகப்படுவன சிலவேயாம். அவற்றில் ஒன்றாக, ராஜா அவர்கள் எழுதி வெளியிட்ட இராஜாம்பாளைக் கூறத் தடையில்லை. இந்நூலால், ஆண்பாலாரும் பெண்பாலாரும் அறியக்கிடக்கும் நீதிகளும் வழக்குக்களும் யுக்திகளும் அநேகமுள்ளன. இத்தகைய கதைகள், கேவலம் பொழுது போக்கற்குரிய இன்பமாத்திரமன்றி, பாஷையின் வளர்ச்சிக்குங் கருவியாகக் கூடுமாயின், இவற்றால் இன்னும் பெரும் பிரயோஜனமுண்டென்பது திண்ணம். இந்நவீனத்தின் போக்கு ஒழுங்குடையதாகவும், படிப்பவர் மனத்தை இழுத்துச் செல்லக் கூடியதாகவும் அமைந்திருத்தல் வியக்கத்தக்கதேயாகும் இப்புத்தகம் பார்வைக்கு மிக வழகாகவும் நல்ல காகிதத்திலும் அமைக்கப்பெற்று, 184-பக்கங்கள் கொண்டுள்ளது. இதன் விலை அணா-12" (செந்தமிழ் 6, 1907-1908, ப. 75)

ஒரு நூலைப் படித்து அதற்கு மதிப்புரை எவ்வாறு எழுத வேண்டும் என்ற நெறிமுறையை இவரெழுதிய இம்மதிப்புரை மூலம் அறியமுடிகிறது. இவ்வாறே இவர் பல நூல்களுக்கு மதிப்புரை எழுதிச் செந்தமிழ் இதழில் வெளியிட்டுள்ளார்.

செந்தமிழ் இதழின் ஆசிரியராக இருந்த காலத்தில் இவர் பதிப்பித்த நூல்கள், பாடல்கள் பலப்பல: சிலவற்றுக்கு உரைக்குறிப்புகள் எழுதியுள்ளார். சிலவற்றை மூலத்துடன் பதிப்பித்துள்ளார். எல்லா நூலுக்கும் எழுதிய முன்னுரையில் தாம் அந்நூலைப் பதிப்பிக்க நேர்ந்த காரணத்தைக் கூறியுள்ளார்.

'பெரும்பொருள் விளக்கப் பாடல்கள்' எனும் நூலின் பதிப்புரையில் ஐயங்கார் கூறியன வருமாறு :

"இப்பெயர் பெற்ற நூலொன்று புறத்திரட்டு என்னும் தொகை நூலில் எடுத்தாளப்படுகின்றது. இத்திரட்டில் எடுத்துக் கோக்கப்பெற்ற பாடல்கள் நாற்பதென்று ஒருவாறு கணக்கிடப்பட்டது. இப்பெரும் பொருள் விளக்கம் இப்போது அகப்பட்டிலதாயினும், இதன் பாடல்களால், அநேக தர்ம விஷயங்களை இந்நூல் கூறுவதென்பதும் பழைய சான்றோரால் இயற்றப் பெற்ற உயர்வுடையதென்பதும் விளங்குகின்றன. தொல்காப்பியப் பொருளதிகாரம் புறத்திணையியலில், ஆசிரியர் நச்சினார்க்கினியர் புறப்பொருட்டுறைகள் பலவற்றுக்கு இந்நூற்பாடல்களை மிகுதியும் உதகரிக்கின்றனர். அவற்றில், புறத்திரட்டாற் பெரும்பொருள் விளக்கம் என்று தெளிவாகத் தெரிந்தவைகளே இப்போது பதிப்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறே, புறத்திரட்டில் வளையாபதி, ஆசிரியமாலை, சாந்தி புராணம், தகடூர் யாத்திரை, நாரத சரிதை, இரும்பல் காஞ்சி முதலிய நூல்களினின்று பல அழகிய பாடல்களும் கோக்கப்பட்டிருக்கின்றன. முன்பு, வளையாபதி ஆசிரியமாலைப் பாடல்களைச் செந்தமிழ் மூலம் ஆராய்ந்து வெளியிட்டது போலவே, இப்போது பெரும்பொருள் விளக்கப் பாடல்களையும், நூலிலுள்ளவாறு இயன்றவரை ஆராய்ந்து வெளியிடுகின்றமையால், இம்முயற்சியில் நேருங் குற்றங் குறைகளை அறிஞர் பொறுப்பார்களாக."(செந்தமிழ் 6,1907-1908, பக். 577-583)

பெருந்தொகை (இரண்டு தொகுதிகள்), நிகண்டகராதி, திருக்குறள் பரிமேலழகர் உரை (கையடக்கப்பதிப்பு), நரி விருத்தம் (அரும்பதவுரையுடன்) போன்ற நூல்களைப் பதிப்பித்துள்ளார்.

ஏடுகளில் எழுதப்பட்ட பழந்தமிழ் நூல்களில் பாடவேறுபாடுகள் அமைவது உண்டு. உரையாசிரியர்கள் அவற்றுள் ஏற்புடையனவற்றைக் கொண்டு ஏலாதனவற்றை விலக்கி விடுவதுண்டு. அம்முறையில் ஐயங்கார் தாம் பதிப்பித்த நூல்களில் உள்ள பாடல்களில் காணப்படும் பாடவேறுபாடுகள் சிலவற்றை எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார். சான்றுக்குப் பெரியாழ்வார் திருமொழி முதற்பத்தில் காணப்படும்,

"வண்ண மாடங்கள் சூழ்திருக் கோட்டியூர்
கண்ணன் கேசவ நம்பி <u>பிறந்தினில்</u>"

"எண்ணெய் கண்ண மெதிரெதிர் தூவிடக்
கண்ணன் முற்றங் கலந்தள றாயிற்றே" (1)

"பேணிச் சீருடைப் பிள்ளை <u>பிறந்தினில்</u>
காணத் தாம்புகு வார்புக்குப் போதுவார்" (3)

என்ற பாசுரங்களில் 'நம்பி பிறந்தினில்', 'பிள்ளை பிறந்தினில்' என்று வழங்கப்படுகின்றன. 'பிறந்தினில்' என்பதற்குப் – பிறந்தபோது, பிறந்தவளவில் எனவும், 'பிறந்தவிதனில் என்பதன் விகாரமாகவும்மாம் எனவும் சிலர் பொருளுரைத்துள்ளனர். இதை,

'நம்பி <u>பிறந்தீனில்</u>', 'பிள்ளை <u>பிறந்தீனில்</u>'

என்று பாடங்கொள்வதே பொருந்தும். கண்ணன் அவதரித்த சூதிகாகிருகம் என்பது இங்கே பொருளாம். பிறந்த ஈனில் – பிறந்தீனில்; பிறந்தகம் என்பது போல, ஈன் இல் – பிரசவ வீடு, பிறந்த பிள்ளையைக் காணப்புகுவதற்கும், புக்குப் போதுதற்கும் பிரசவவீடு என்ற பொருளே மிகவும் ஏற்புடையதாகும். இப்பொருளில் குறுந்தொகை, பதினாராந்திருமுறை, திருக்கோவையார் முதலான நூல்களில் வழங்கப்படும் மேற்கோள்களை எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார் (செந்தமிழ் 40, 1942–1943, ப.11).

மு. இராகவையங்கார் தம் 24ஆம் வயதில் முதன்முதல் செந்தமிழ் இதழ் மூலம் ஆய்வுப்பணியைத் தொடங்கி ஏறத்தாழ 58 ஆண்டுகள் வரை எழுத்துப் பணியைத் தம் மூச்சாகக் கொண்டிருந்தார். தமிழ் இலக்கிய வரலாற்றில் இவருக்கென்று

ஓரிடம் இருப்பது வெள்ளிடைமலை. இன்றைய இளம் ஆய்வாளர்களுக்கு இவர் ஆய்வுப் போக்கு, நெறிமுறைகள் பெரிதும் உறுதுணைபுரியும்.

செந்தமிழ் இதழில் இவரால் பதிப்பிக்கப்பெற்ற நூல்கள்

1. தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவரியற்றிய தொட்டிக் கலைக் கேசவப் பெருமாள் இரட்டை மணிமாலை, 1905.
2. உதீசி தேவரியற்றிய திருக்கலம்பக மூலமும் உரையும், 1907.
3. பரஞ்சோதியாரியற்றிய சிதம்பரப் பாட்டியல் மூலமும் உரையும், 1907.
4. கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி, 1925.
5. திருக்குறள் பரிமேலழகர் உரையுடன், கையடக்கப்பதிப்பு, 1933.
6. பெருந்தொகை, 1935.
7. நிகண்டகராதி
8. நூற்பொருட்குறிப்பு .

செந்தமிழ் இதழில் எழுதிய கட்டுரைகள்

வ. எண்	இதழ் எண்	ஆண்டு	கட்டுரைத் தலைப்பு
1	1	1902–1903	பொய்கையார்
2	2	1903–1904	பெரியாழ்வார் கால நிர்ணயம்
3	3	1904–1905	இடைச்சங்கம்
4	3	1904–1905	பாரத காலமும் தமிழரும்
5	3	1905–1906	ஸ்ரீ திருவேங்கடமுடையான்
6.	4	1905–1906	இளம்பூரணவடிகள்
7.	4	1905–1906	ஒப்புரவறிதல்
8.	5	1906–1907	ஆசிரியமாலைச் செய்யுட்கள்
9.	5	1906–1907	சிற்றாராய்ச்சிகள்
10.	5	1906–1907	செந்தமிழின்5ஆவது ஆண்டு
11.	5	1906–1907	திருவாலவாயுடையார் கோயிற்றிருப்பணிகள் விவரம்

வ. எண்	இதழ் எண்	ஆண்டு	கட்டுரைத் தலைப்பு
12.	5	1906–1907	பழைய குறியீட்டெழுத்துக்கள்
13.	5	1906–1907	பழைய தமிழ் எழுத்துக்கள்
14.	5	1906–1907	பழையனூர் நீலிக்கதைகள்
15.	5	1906–1907	புதுவைச் சேதிராயன்
16.	5	1906–1907	பொய்யாமொழிப் புலவர்
17.	5	1906–1907	மதுரைத் தலவரலாறு
18.	5	1906–1907	மதுரைத் தானிகர் வரலாறு
19.	5	1906–1907	யாழோர் கூட்டம்
20.	5	1906–1907	வீரத்தாய்மார்
21.	6	1907–1908	ஆலஞ்சேரி அயிந்தன்
22.	6	1907–1908	ஏகம்பவாணன்
23.	6	1907–1908	கருமாணிக்கன் கோவை ஆகிய கற்பற்கோவை
24.	6	1907–1908	நக்கீரனார்
25.	6	1907–1908	நரி விருத்தம்
26.	6	1907–1908	பகழிக்கூத்தர்
27.	6	1907–1908	பெரும்பொருள் விளக்கப் பாடல்கள்
28.	6	1907–1908	ஸ்ரீ பெரியாழ்வாரும் பாண்டியரும்
29.	7	1908–1909	இறைமாட்சி
30.	7	1908–1909	குண்டலகேசி வரலாறு
31.	7	1908–1909	கூத்தச்சாக்கையன்
32.	7	1908–1909	தருக்க சூத்திரம்
33.	7	1908–1909	திருவள்ளுவரைப் பற்றிய சில குறிப்புகள்
34.	7	1908–1909	பண்டைக் கைத்தொழில் வியாபாரங்கள்
35.	7	1908–1909	பழைய புலவரின் பெருந்தன்மைகள்
36.	7	1908–1909	மதுரைக் காஞ்சி ஆராய்ச்சி
37.	7	1908–1909	முனையதரையர்
38.	7	1908–1909	மூன்று தமிழ்க் குடிகள்
39.	8	1909–1910	அருச்சுனனும் பாண்டிய மரபும்
40.	8	1909–1910	கண்ணபிரானைப் பற்றிய தமிழ்நாட்டு வழக்குக்கள்

41.	8	1909–1910	கலிங்கத்துப்பரணி சங்கோத்தரம்
42.	8	1909–1910	தமிழ்நாட்டில் வழங்கும் கண்ணபிரான் சரிதங்கள்
43.	8	1909–1910	தொல்காப்பியத்துக் கண்ட பழைய வழக்குகள்
44.	8	1909–1910	பிரம்மதேவரும் திருவள்ளுவரும்
45.	8	1909–1910	வேள்புலம்
46.	8	1909–1910	ஸ்ரீ இருந்தவளமுடையார்
47.	8	1909–1910	ஸ்ரீ வால்மீகரும் தமிழ் வழக்குக்களும்
48.	8	1909–1910	ஸ்ரீ வால்மீகரும் தென்னாடும்
49.	11	1912–1913	வேள் பேகன்
50.	13	1914–1915	சாசனமும் தமிழ்ச் சரிதங்களும்
51.	18	1919–1920	தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி
52.	19	1920–1921	மார்கழி நோன்பாகிய தைந்நீராடல்
53.	22	1923–1924	தமிழரும் ஆந்திரும்
54	22	1923–1924	திருமங்கையாழ்வாரும் தந்திதுர்க்கனும்
55	23	1924–1925	கருணாகரத் தொண்டைமான்
56.	23	1924–1925	கலிங்கத்துப் பரணிக் குறிப்புக்கள்
57.	23	1924–1925	தொல்காப்பியனாரும் புள்ளியெழுத்துக்களும்
58.	24	1925–1926	அமிதசாகரர்
59.	27	1928–1929	சேரவேந்தர் தாயவழக்கு
60.	28	1929–1930	சேரவம்சாவளி
61.	31	1933–1934	பாரிபாட்டுச் சிறப்புப்பாயிரம்
62.	40	1942–1943	அருளிச் செயற்பாடவமைதி
63.	40	1942–1943	*சிலப்பதிகார வழக்கவொழுக்கங்கள்*
64.	40	1942–1943	பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி
65.	40	1942–1943	மதுரைக் காஞ்சி
66.	40	1942–1943	வில்லிபுத்தூரார் காட்டிய வீரநெறிகள்

மூன்று சொற்களும் மும்மண்டலமும்

ஆய்வு மாணவர் ஜெ. அரங்கராஜ்
தமிழ்ப் பல்கலைக்கழகம்,

முன்னுரை

ஓர் உலகத்தரம் வாய்ந்த காப்பியத்தை உண்டாக்கும் ஆசிரியர் அக்காப்பியத்தை உலக நிலையில் காட்டப் பல நிலைகளைக் கையாளுவர். அவ்வகையிலேதான் இளங்கோவடிகளும் சிலப்பதிகாரத்தை உண்டாக்கினர். சிலம்பின் கானல் வரியில் பொருளும், உள்ளுறையும், இறைச்சியும் உரையாசிரியர்களாலும், ஆய்வாளர்களாலும் பெரிதும் சேர்க்கப்பட்டுப் பல்வகைப்பட்ட செறிவு மிகுந்த கருத்தியலாக்கத்தை வழங்கியுள்ளன. அதே பொழுது சிலம்பின் மற்றைய சில வரிகளில் தெளிந்த விளக்கங்கள் காணப்படாமலேயே உள்ளன. அவ்வாறான இடங்களில் ஒன்று வேட்டுவ வரியில் அமைந்த 47 முதல் 50 வரையிலான அடிகளாகும். இவ்வடிகளுக்கு அடியார்க்கு நல்லார் முதலான உரையாசிரியர் பலரின் கருத்துக்களையும் அவை வேறுபடும் நிலைகளையும் இவ்வாய்வில் காணலாம்.

வேட்டுவ வரியில் சாலினி கூற்று

வேட்டுவர்கள் சாலினி என்னும் தங்கள் குலப் பெண்ணைக் கொற்றவையைப் போல் சோடித்து அவளை வழிபட்டனர். அப்பொழுது தெய்வம் ஏறப்பெற்ற அப்பெண் கண்ணகியை அறிமுகப்படுத்தும் கூற்றாக,

> இணைமலர்ச் சீறடி யினைந்தனள் வருந்திக்
> கணவனோ டிருந்த மணமலி கூந்தலை
> இவளோ, கொங்கச் செல்வி, குடமலையாட்டி
> தென்றமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்
> தொருமா மணியா யுலகிற் கோங்கிய
> திருமா மணியெனத் தெய்வமுற் றுரைப்ப

எனும் இவ்வடிகள் அமைந்துள்ளன. இதற்கு அடியார்க்கு நல்லாரின் உரையைப் பார்த்தோமானால், இவள் கொங்க நாட்டினையாளும் செல்வி குடநாட்டினையாளும் செல்வி தென்றமிழ் நாட்டினையாளும் பாவை. இங்ஙனமாவதற்கு முற்பவத்திற் செய்த தவத்தின்கண் முளைத்த கொழுந்து போல்வாள் இவ்வுலகிற்கு முழு மாணிக்கம் போன்று உயர்ச்சி பெற்ற பெண்ணுருக் கொண்டதோர் திருமணியெனச் சாலினி தன்

தெய்வத்தன்மையான் இங்ஙனம் இவளை மிகுந்துரைப்பவென்க. கண்ணகி அன்னளாதலைக் கொங்கிளங் கோசர் (சிலப் – உரைபெறு கட்டுரை) என்றது முதலியவற்றாலறிக.

ந.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களும் இக்கருத்திற்கு உடன்பாடுடையவராகவே உள்ளார். இவ்வுரையில் கொங்கம் என்பதற்கான விடையாகக் கொங்கிளம் கோள் என்பனவற்றைக் கொண்டு கொங்கு நாடெனக் கொண்டார்கள் என்பது தெளிவாகிறது. ஆனால் இதற்கு மற்றும் பல பொருள்களும் உண்டு. அவற்றைக் காணலாம்.

கொங்கச் செல்வி

கொங்கச் செல்வி எனும் இச்சொல்லிற்குக் கொங்கு நாட்டை ஆள்பவள் எனப் பொதுப்படப் பெயர் வழங்கினும் அது இவ்விடத்தில் ஏற்புடையதன்று. அடியார்க்கு நல்லாரின் காலம் கி.பி. 13ஆம் நூற்றாண்டு அதற்கு முன்பே சேந்தன் திவாகரம் எனும் நிகண்டு தோன்றி விட்டது. அந்நிகண்டில் சேர மன்னர்களின் பெயர்களாக வருவனவற்றில் கொங்கன் என்பதுவும் ஒன்று. அது போலவே சூடாமணி நிகண்டும் கொங்கன் என்றால் சேரன் என்றே நவிற்றுக்கிறது. சேரர்களின் இரண்டாவது தலைநகரமாக அமைந்த கருவூர் வஞ்சியும் கொங்கு நாட்டில் அமைந்ததே. இதன் வழிச் சேரர் கொங்கர் *எனப்பட்டனர்.* அதனால் கொங்குச் செல்வி என்பதினைச் சேரரின் மகள் என முடிவு கொள்வதே சாலப் பொருந்தும். பெற்றோருக்குப் பிள்ளைகள் செல்வமாகையால் ஆண்பால் செல்வன் என்றும் பெண்பால் செல்வி என்றும் பெயர் பெறுவார் என்கிறார் பாவலரேறு ச. பாலசுந்தரம்.

குடமலையாட்டி

குடமலையாட்டி எனும் சொல்லிற்குக் குட நாட்டினையாளும் செல்வி என்றே பொருள் கூறப்படுகிறது. இது ஏற்புடையதன்று. எனில் குட என்னும் சொல்லுக்கு இருபொருளுண்டு. ஒன்று மேற்றிசையைக் குறிக்கும் மற்றொன்று வளைவைக் குறிக்கும். மேற்றிசை என்னும் பொருளில் வரும் குட எனும் சொல் சேர நாட்டையும், அதனை அடுத்த மேற்குக் கடலையும் குறிப்பனவாக அமைகின்றன.

குடபுலக் காவலர் மருமா னொன்னார்
வடபுல விமயத்து வாங்குவிற் பொறித்த (சிறு 47-48)

இவ்விடத்தில் குடபுலம் என்பது மேற்குத் திசை எனும் பொருளில் சேர நாட்டைக் குறிக்கிறது. குடநாடு என்பதில் உள்ள குடம் என்னும் சொல் மேற்கு எனும் பொருளில் கொச்சி சார்ந்த சேரநாட்டைக் குறிக்கும். மேற்கு மலையைக் குறிப்பதற்கு எவ்விடத்திலும் குடமலை எனும் சொல் குறிக்கப்பட்டதாக அறியவில்லை. மாறாக மேற்கு மலைகள் குடமுதற் குன்றம் எனும் சொல்லால் குறிக்கப்படுகிறது.

யொன்சுட குரும்பொளி மழுங்கச் சினந்தணிந்து
சென்ற ஞாயிறு நன்கற் கொண்டு
குடமுதற் குன்றஞ் சேரக் குணமுத
னான்முத மதியந் தோன்றி நிலாவிரிவு (மது 545-548)

இவ்வடிகளில் மேற்கு மலை என்பதற்குக் குடமுதற் குன்றம் என்ற சொல் பயன்பாட்டை அறியலாம். இதனையே நச்சினார்க்கினியரும்

நல்பகல் கொண்டு குடமுதல் குன்றம் சேர – பின்னர் நன்றாகிய பகற்பொழுதைச் சேரக் கொண்டு மேற்றிசையிடத்து அத்தகிரியைச் சேருகையினாலே என்று தமது உரையில் புலப்படுத்துகிறார். இவ்விடத்திலே குட என்பது திசையைக் குறித்து வந்தது.

குடமலை என்பது இன்றைய தென் கர்நாடக மாவட்டமும் பழந்துளுவநாடுமான காவிரி பிறக்கும் குடகுமலையேயாகும்.

குடமலை என்பது பெரும்பாலும் எவ்விடத்தும் மேற்குமலை என்ற திசைப் பொருளில் பயன்படுத்தப்பட்டதாக அறியவில்லை. அப்படியாகில் அதற்கு என்ன பொருள் என்பதினை ஆய்வோம். குட என்னும் சொல்லுக்கு வளைவு என்னும் பொருள் இருப்பதாக மேலே கண்டோம். இதனைப் பழந்தமிழ் இலக்கியங்களும் உறுதி செய்கின்றன.

மாண்டலைக் கொடியோடு மண்ணியமைவர
நெய்யோ டையவி யப்பி யைதுரைத்தும்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி (திரு 227 - 229)

இதில் குடந்தம் பட்டு எனும் சொல் உடல் வளைந்து வணங்குதலைக்குறிக்கிறது. இதற்கு உரைதரும் நச்சினார்க்கினியரும் .... ?????

குடந்தம் பட்டு - வழிபட்டு

வணக்கம் பட்டென்று உரைப்பர் குடவென்பது தடவென்பது போல வளைவை உணர்த்துவதோர் உரிச் சொல்லாதலின் அதனடியாகப் பிறந்த பெயருமாம் என, குட எனும் சொல்லின் வளைவு என்ற வடிவப் பொருளை உறுதி செய்கிறார்.

> உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட்
> பாம்போ டுடனுறைந் தற்று (குறள் 890)

எனும் திருக்குறளில் வரும் குடங்கருள் என்பது வளைந்து இருண்ட மலைக் குகையையும் கிணற்றுக்குள் வளைந்த குடவரையையும் குறிக்கும். இச்சொல் இன்றும் கொங்கு வழக்கில் கிணற்றின் வளைந்த உள் இடைவெளியைக் குறிக்கக் கொடங்கு எனத் திரிந்து வழங்குவதன் வழி அதன் பொருளை அறியலாம். உட்குடைந்து (வளைந்து இருப்பது) குடை, குடம் என்பனவாகும். நிலத்தின் உள் குடைந்து கடல் புகுந்திருப்பதால் இலங்கைத் தீவின் வடபாலுள்ள யாழ்ப்பாணம் யாழ் குடநாடு என வழங்கலாயிற்று. இதற்கு மேற்குநாடு என்னும் திசைப் பொருள் பொருந்தாது. அது போல் நில அமைவில் மலைப்பகுதிகள் மிகுதியும் வளைந்து அமைந்துள்ளமையால் காவிரி பிறக்கும் மலை குடமலையாயிற்று. இன்றும் காவிரி பிறக்கும் தென் கன்னட மாவட்டம் குடகு மாவட்டம் எனும் பெயரிலேயே அமைந்துள்ளது. இதற்கு மேற்கு என்னும் திசைச் சுட்டுப் பெயர் பொருந்தாது. வளைவு எனும் வடிவப்பொருளே பொருந்தும். எனவே காவிரி பிறக்கும் குடமலையையொட்டியே இளங்கோவடிகள் குடமலையாட்டி எனும் அடியை அமைத்தார் என்பதினை உணரலாம்.

காவிரி பிறக்கும் மலையே குடமலை என்பதற்குப் பல்வகைச் சான்றுகளைச் சங்க இலக்கியங்களில் அறியலாம்.

> வான் பொய்ப்பினுந் தான் பொய்யா
> மலைத்தலைஇய கடற்காவிரி
> புனல் பரந்து பொன் கொழிக்கும (பட் 5-7)

எனும் பட்டினப்பாலையடிகளுக்கு விளக்கம் தரும் நச்சினார்க்கினியர் தான் பொய்யா மலை தலைய கடல் காவிரி தான் பொய்யாமற்

காலந்தோறும் வருகின்றகுடகுமலையிடத்தே தலையினையுடைய கடலிடத்தே செல்கின்றகாவிரி என இயம்புகிறார்.

மலைபடுகடாமிலும் காவிரி தோன்றும் மலை குடகுமலை என்பது உறுதியாகிறது.

நேமியிற் செல்லு நெய்க்க ணிறாஅ
லுடம்புணர்பு தழீஇய வாசினி யனைத்துங்
குடமலைப் பிறந்த தண்பெருங் காவிரி
கடன்மண் டழுவத்துக் கயவாய் கடுப்ப (மலை 525 - 528)

இதற்குஉரை சொல்லும் நச்சினார்க்கினியர் குடமலையிற் பிறந்த குளிர்ந்த பெரிய காவிரி கடலிலே மிக்குச் செல்கின்றஆழத்தையுடைய முகத்தி யொப்ப என்கிறார். சிலம்பில் நாடுகாண் காதையில் காவிரி பிறக்கும் மலைதான் குடமலையாகக் குறிப்பிடுகிறது.

குடமலைப் பிறந்த கொழுப் பஃறாரமோடு
கடல்வள னெதிரக் கயவாய் நெரிக்கும்
காவிரிப் புதுநீர்க் கடுவரல் வாய்த்தலை
ஓவிறந் தொலிக்கு மொலியே யல்ல

எனும் அடிகளில் காவிரி பிறப்பதே குடமலையாகக் கூறப்படுகிறது. பட்டினப்பாலையில் இடம்பெறும்,

நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த வாரமு மகிலும்

என்ற அடிகளில் காலின் வந்த கருங்கறி மூடையும் என்பது கலத்திலே வந்திறங்கிய மிளகு மூடையைக் குறிக்கின்றது. மிளகு பெரும்பாலும் குடநாட்டில் (கொச்சி) இருந்து வருவது. ஆனால் குடமலைப் பிறந்த வாரமு மகிலும் தனியாகக் குறிக்கப்பட்டுக் குடகு நாட்டைக் காட்டுகிறது. இச்சான்றுகளின் வழிக் குடமலை என்பது காவிரி பிறக்கும் குடகு நாடே எனக் கொள்ளலாம். இளங்கோவடிகள் தமிழகத்தின் வடமேற்கு எல்லையான எழில் குன்றுக்கு அப்பால் உள்ள குடகு மலையை ஆள்பவள் (ஆட்டி—ஆள்பவள்) எனக் கண்ணகியை ஏன் காட்ட வேண்டும் என்று எண்ணும் பொழுது அவரின் செறிவான கருத்து புலப்படுகிறது.

இளம்பெண் காவிரி சோழர்களுக்குப் புகாரிலே தாய் ஆனாள். குடமலையில் மகள் என்றகருத்தோட்டத்தினை வைத்தே குடமலையாட்டி என்கிறார்.

தென்தமிழ்ப் பாவை

தென்தமிழ்ப் பாவை எனும் அடியின் வழித் தென் தமிழானது பாண்டியர்க்குச் சொந்தமானது. பாவை எனும் சொல்லுக்குத் தெய்வம், *மகள்* எனும் பொருள்களுண்டு. இதனடியில் பாண்டியரின் தெய்வ மகளாகக் கண்ணகி காட்டப்படுகிறார்.

முடிவுரை

இவ்வாறாக இந்த மூன்று சொல்லின் வழித் தமிழக மும்மன்னர்களுக்கும் மகளாகக் கண்ணகியை இளங்கோவடிகள் காட்டுகிறார். மேலும் அடிகளாரின் இச்சொற்கள் தமிழக இணைப்பை இறுக்குவதாகவே உள்ளது.

கொங்கச் செல்வி என்று ஏன் சொல்லவேண்டும்? காவிரித் திருவாட்டி என்று சொல்லலாமே. பின் ஏன் இவ்வாறு அமைத்தார் என்றால் குடமலையில் தோன்றும் காவிரி சேரரின் கொங்கு நாட்டின் வழியாக ஓடிச் சோழ நாட்டை அடைகிறது. இதன் வழிச் சேரநாட்டிற்கும், சோழ நாட்டிற்கும் பொது இணைப்பாகக் காவிரியைக் காட்டுகிறார். கொங்கு (சேரர்) காவிரி சோழர் மகளாவது போலச் சோழ நாட்டுக் கண்ணகி சேரநாடு வந்து சேரர்க்கும் மகளாகித் தெய்வமானாள் என இணைப்பை வலுவாக்குகிறார்.

தென் தமிழ்ப் பாவை என்று ஏன் சொல்லவேண்டும்? பாண்டியர் பாவை என்றே சொல்லலாமே. ஏன் எனில் தென் தமிழ்ப் பாவை பாண்டியரின் சிறப்புத் தமிழ் குறித்து அமைத்தாரெனில் பாண்டியர்க்குச் சிறப்பு நிலை வழங்கும் தமிழானது சேர சோழர்க்கும் பொது மொழியாகத் தாயாக அமைகிறது. இதன் வழித் தமிழகம் முழுமைக்கும் பெரும் இணைப்பினை இம்மூன்று சொற்களைக் கொண்டு அடிகளார் அமைக்கின்றார் எனக் கருதலாம்.

2007 செப்டம்பர்த் திங்களில்

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் நூற்றாண்டு விழா நடைபெறும்.

தொடர்பு முகவரி

பதிப்பாசிரியர்,

இரா. சதாசிவம்,

செந்தமிழ்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை – 625 001.

போன் : (0452)-2532879

இல்ல முகவரி

இரா. சதாசிவம்,

2/404, மருதுபாண்டியர் தெரு,

வட்டாட்சியர் நகர்,

மதுரை – 625 020.

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, வட்டாட்சியர் நகர், மதுரை-20. ✆ 2532879.

ஆசை அச்சகம், மதுரை. ✆ 26 222 50, 98434 - 32484

பதிப்பாசிரியர்

பேராசிரியர். திரு. இரா. சதாசிவம்

ஆசிரியர் குழு

முனைவர் திரு. தமிழண்ணல்
பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்
டாக்டர் திரு. ந. சேதுராமன்
முனைவர் திரு. சுப. அண்ணாமலை
முனைவர் திரு. ம.ரா.போ. குருசாமி
முனைவர் திரு. அ.அ.மணவாளன்
முனைவர் கதிர் மகாதேவன்
முனைவர் நா. பாலுசாமி
முனைவர் பெ. சுயம்பு
முனைவர் திரு. அ. தட்சிணாமூர்த்தி
இராசா திரு. முருகதாஸ் தீர்த்தபதி
முனைவர் திரு. செ. கந்தசாமி
முனைவர் திரு. க. சின்னப்பா

அனுப்புநர்,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை- 625001.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 625001.
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,